பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 20 வெள்ளிக்கிழமை 5-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 8

# இந்திய நாடாளுமன்றம் நேற்று கலைக்கப்பட்டது

## மார்ச் 15க்கு முன் புதிய அரசு அமைப்பு

புதுடில்லி, டிசம்பர் 5

இந்திய நாடாளுமன்றம் நேற்றுக் கலைக்கப்பட்டது. மாற்று அரசாங்கம் அமைக்கும் முயற்சி வெற்றி அளிக்காததையடுத்து ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் இந்தியாவின் 11 ஆவது மக்களவையைக் கலைக்கும் முடிவை நேற்று அறிவித்தார். புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான தேர்தல் பெப்ருவரி இறுதியில் அல்லது மார்ச் முதல் வாரத்தில் நடத்தப்படும்.

ஐக்கிய முன்னணி அரசுக்கு காங்கிரஸ் வழங்கி வந்த ஆதரவு விலக்கப்பட்டதை அடுத்து ஐக்கிய முன்னணி அரசு பதவி விலகியது தெரிந்ததே.

ஜெயின் கமிஷன் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தி.மு.கவை ஐக்கிய முன்னணி அரசு வெளியேற்ற வேண்டும் என்று காங்கிரஸ் கோரி இருந்தது.

இதனை ஏற்க பிரதமர் குஜ்ரால் மறுத்த போது ஐக்கிய முன்னணி அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டது. மாற்று அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் காங்கிரஸும் பாரதீய ஜனதாவும் கடந்த சிலநாள்களாக ஈடுபட்டன.

எந்த ஒரு கட்சியாவது மாற்று அரசு அமைக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் குறித்து அலுவலகத்துக்கு எதுவுமே தெரியாது!

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது பற்றிய அறிவிப்பு தேர்தல் ஆணையாளரால் கடந்த புதனன்று விடுக்கப்பட்டது.

குடாநாட்டில் இத்தேர்தல்கள் தொடர்பாக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? எந்த ஆண்டு வாக்காளர் இடாப்புகளின் அடிப்படையில் தேர்தல் நடக்கும்? — போன்ற விவரங்களை அறிவதற்காக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடந்தே தீரும்

### நேற்று பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, டிச. 5

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் இம்முறை திட்டமிட்டபடி நடைபெறும். எக்காரணம் கொண்டும் இத்தேர்தல் ஒத்திவைக்கப்பட மாட்டாது.

இவ்வாறு நீதி அரசமைப்பு விவகார அமைச்சர், பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஹட்டனில் நேற்று குண்டு வெடிப்பு!

# எரிபொருள் தாங்கிகள் சேதம்!!

கொழும்பு, டிச. 5

ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள தனியார் எரிபொருள் நிலையத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நான்கு எரிபொருள் தாங்கிகளும் பௌசர் ஒன்றும் சேதமடைந்தன. மொத்தம் ஆறு குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. நான்கு எரிபொருள் தாங்கிகளுக்கும் ஒவ்வொரு குண்டும், 2 பௌசர்களுக்கும் ஒவ்வொரு குண்டும் வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இவற்றில் பௌசர் ஒன்றுக்கு வைக்கப்பட்ட குண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

நேற்று அதிகாலை 4 மணி முதல் 5 மணி வரை தொடர்ந்து எதிரொலித்த குண்டு வெடிப்புச் சத்தங்கள் காரணமாக ஹட்டன் நகர் அதிர்ந்ததாக ஹட்டன் வாசிகள் தெரிவித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுச்சந்தி தாக்குதல் குறித்து அறிவிப்பு

வவுனியா, டிச. 5

கடந்த மாதம் 30 ஆம் திகதி முருங்கனில் பதுங்கியிருந்து இராணுவம் நடத்திய தாக்குலில் உயிரிழந்த கப்டன் எழிலரசன் (யாழ்ப்பாணம்), கப்டன் நித்தி (திருகோணமலை) ஆகியோரின் நினைவாக கடந்த திங்கட்கிழமை மடுச்சந்தியில் படையினரின் வாகனம் மீது தாக்குதல் நடந்தியதாக '' புலிகளின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர் கோயில் பகுதி மோதலில் சிப்பாய் பலி!

### படையினர் தேடுதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 5

எழுதுமட்டுவாழ் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு அப்பால் நாகர் கோயில் பகுதியில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செவ்வாய் இரவு மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகத் தெரியவந்தது.

அப்பகுதியில் அமைந்திருந்த படையினரின் பாதுகாப்பு நிலைகளை விடுதலைப் புலிகள் தாக்கியதை தொடர்ந்து மோதல் வெடித்ததாகவும் —

அப்பகுதியில் வான் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கூடுதலான படையினர் அங்கு அனுப்பப்பட்டுத் தேடுதல் இடம் பெற்றதாகவும் தெரியவந்தது.

அதேவேளை — நாகர் கோயில் பகுதியில் இடம் பெற்றமோதலில் படையினர் ஒருவர் உயிரிழந்ததாகவும், மற்றுமொருவர்காயமடைந்ததாகவும் —

புலிகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதாகவும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் குறித்து விவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப யாழ். தேர்தல் ஒரு ''திடீர் தோசை'' என்று சொல்லுங்கோ......!

## புலிகள் - படையினர் வன்னியில் கடும் சமர்

### ஷெல் தாக்குதலில் சிப்பாய் பலி

கொழும்பு, டிச. 5

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை துருப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை கடும் சண்டை நடந்துள்ளதாகத் தெரியவந்தது'' என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்தார்.

வன்னியில் சீரற்ற கால நிலை நிலவிய போதிலும், குறிப்பிட்ட இலக்கை அடையவேண்டும் என்று திடசித்தம் கொண்டு படையினர் முன்னேறிவருகிறார்கள் என் அவர் கூறினார்.

படையினரின் நகர்வுக்கு விமானம் மற்றும் பீரங்கிப் படையினரின் முழு உதவி பெறப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் —நேற்றுமுன் தினம் புளியங்குளத்துக்கு கிழக்கே பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டிருந்த படையினர் மீது புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார், ஆறு படையினர் காயமடைந்தனர். [இ-21-3-164]

## நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன் புளொட் இன்று உண்ணாவிரதம்!

யாழ்ப்பாணம், டிச. 5

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கோட்டேயில் உள்ள நாடாளுமன்றத்துககு முன்பாக இன்று காலை 9 00 மணி முதல் உண்ணாவிரதம் இடம்பெறவிருக்கிறது.

'புளொட்' அமைப்பின் ஏற்பாட்டில் அதன் உப-தலைவர் என். மாணிக்கதாசன் தலைமையில் நடைபெறும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு பற்ற தமிழ்க்கட்சிகளுக்கும், மனிதஉரிமை அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்தும் இந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்ற பொது மக்கள் செல்லவிருக்கின்றனர்.

யாழ் மாவடடத்தில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் விவரங்களை வெளியிடக் கோரியும்—

வடக்கு—கிழக்குக்கு வெளியே கண்டபடி தமிழர் கைது செய்யப்படுவதை நிறுத்தக் கோரியும்—

வவுனியா அகதிமுகாமில் அடைக்கு வைக்கப்பட்டுள்ளவர்கள் விரும்பும் இடத்துக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோரியும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக்கடலில் தாழ்வுமண்டலம்

வங்கக் கடலில் மன்னார் வளைகுடாவுக்கும் தமிழ் நாட்டின் வடக்குக் கரையின் தென்மேற்கு வளைகுடாவுக்கும் இடையில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒன்று உருவாகி இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாக்கடலில் கைதான 24 பேரும் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், டிச. 5

குடாக்கடலூடாக படகுகளில் விஸ்வமடுவில் இருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த சமயம் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின் பிணையில் விடப்பட்டிருந்த 24பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 17ஆம்திகதி காரைநகர் கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் ஊர்காவற்றுறை பொலீஸாரால் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் ஊர்காவற்றுறையில் நடந்த அமர்வு நீதிமன்றில் இவர்கள் ஆஜர் படுத்தப்பட்டபோது பதில் நீதிவான் க. கேசவன் இவர்களை விடுதலை செய்தார்.

மூன்று சிறுவர்கள், பெண்கள் உட்பட இந்த 24பேரும் 1990ஆம்ஆண்டு அச்சுவேலி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வன்னியில் வசித்துவந்தனர்.

தற்சமயம தத்தமது பகுதிகளில் குடியேறுவதற்காக வந்த சமயமே கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் சார்பாக வழக்கறிஞர்கள் பொன். பூலோகசிங்கம், கே. எம். ராதாகிருஷ்ணன், திருமதி ச. இளங்கோவன் ஆகியோர் ஆஜராகினர். (இ-9)

## அறிவுறுத்தல்கூட்டம்

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாக உள்ள ஜீ. சீ. ஈ. சாதாரண தர பரீட்சையில் கலந்து கொள்ள உள்ள வலிகாமம் பகுதியைச்சேர்ந்த பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், பரீட்சை இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவியாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறஉள்ளது. (ஐ-152)

## காணாமற் போனோர் பெற்றோர்கள் கூட்டம்

கைதாகித்தகவலற்று இருப்போரின் பெற்றோர், உறவினர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி ஆகியனவற்றின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல பெற்றோர்களையும், உறவினர்களையும், மற்றும் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## நாவலர் விழா

திருநெல்வேலி கலாமன்ற பொன் விழா நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாக இன்று வெள்ளிக்கிழமை மாலை 3. 30 மணிக்கு நாவலர் பணிமன்ற இணைச் செயலாளர் ஆ. மகாலிங்கம் தலைமையில் மன்ற மண்டபத்தில் நாவலர் விழா நடைபெறும். (ஐ-4)

# மட்டுவில் வடக்கு பொதுச்சந்தை புதிய காணியில் இயங்குகிறது

மட்டுவில் வடக்குப் பகுதியில் சுமார் 10வருடங்களாகத் தனியார் காணியொன்றில் இயங்கி வந்த பொதுச்சந்தை அக் காணி யுரிமையாளரால் காணி பொறுப்பேற்கப்பட்டதையடுத்து வீதியோரம் இயங்கி வந்தது

இச் சந்தை மீண்டும் கடந்த வாரம்முதல் மட்டுவில்வடக்கு லூர்துமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள பொதுக் காணியொன்றில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இப் பொதுச்சந்தை வைத்தியகலாநிதி பே. பிலிப்ஸினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் பட்டது. இந் நிகழ்வு எழுதுவினைஞர் எஸ். சின்னையா தலைமையில் நடைபெற்றது. இச் சந்தையில் வியாபாரிகள் பொதுமக்கள்ஒன்றுகூடி தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இச்சந்தை மட்டுவில்வடக்கு மோகனதாஸ் சனசமூகநிலையத்தால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றது. (ஐ-31)

## சமய சந்நிதியில்

சரித்திரப் பிரசித்தி பெற்ற பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் கார்த்திகைத் திங்களை முன்னிட்டு ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் விசேட அபிசேக ஆராதனைகளுடன் அம்பாள் வீதி உலா இடம்பெற்று வருகின்றது (ஐ-31)


## நகரசபை, சாவகச்சேரி
## வரவு செலவுத் திட்டம்-1998

(255ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின்1979ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப் பட்ட 1998ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் இச்சபையில் 05-12-1997ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்
சாவகச்சேரி.
03-12-97 (சி/2261)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு: — — — 1928

உதிர்வு: 08 — 12 — 1994

### வல்லிபுரம் கந்தையா

**திதி: 05 - 12 - 1997**

நின்திருமுகம் கண்டு நான்கள் ஆயிரம் ஆயினவே
எம் இரு விழிகளின் ஈரம் இன்னமும் காயவில்லையே
பன்னிரு கரத்தான் பாதத்தில் பள்ளி கொண்டீரே
என்றுமை காண்போம் அப்பாவே.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை கிழக்கு,
மீசாலை. (சி/2262)


ஸ்ரீ செல்வா திரை அரங்கு
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
5, 6, 7 ஆம் திகதி மட்டும்
10-30 — 2-30
(பழையநேரம்)
M. G. R.
(இரட்டைவேடம்)
ஜெயலலிதா
நடித்த
குடியிருந்த கோயில்
(C D பிரதி) (51602)

எமது புதிய வெளியீடு!
ரகுவரன்; ராக்கி நடித்த
❖ சேக்கிள் இன்ஸ்பெக்டர்
சுப்பஸோவின்
❖ காட்சியும் கானமும் VOL-2
ஓடியோ CD வெளியீடுகள்
❖ உதவிக்கு வரலாமா
❖ காலேஜ் லவ்
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2263)

யா/மகளிர்கல்லூரி, சாவகச்சேரி
ஆண்டு 6
அனுமதிப்பரீட்சை - 1998
மேற்படி அனுமதிப் பரீட்சை 7-12-97 ஞாயிறு காலை 9. 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
விண்ணப்பஇறுதித் திகதி: 5-12-97.
- அதிபர்
(சி/2265)

A Time for Celebration a Carol Festival
by
The Combined Schools
on Saturday 6 th December 1997
at
10 a.m. [S. L. T.]
at
UDUVIL GIRLS' COLLEGE
You are Cordially Invited.
- Principal
(சி/2264)

நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை!
காவேரி சில்க்ஸ், 48,பெரியகடை, யாழ்ப்பாணம். (51600)

★ மலிவு விற்பனை ★
விசேட விலைக் கழிவு விசேட விலைக் கழிவு விசேட விலைக் கழிவு
நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு விசேட விலைக் குறைப்பு
★ பட்டசில்க் பிறின்ற் ★ சீஸ் குளோத் ★ பேபிறோஸ்
★ செக் துணிகள் ★ சீத்தை ★ சேட் வகைகள்
★ இன்ரகூலர் ★ பெற்சீற் ★ சேலைகள்
★ ஸ்ரைப் துணிவகைகள் ★ சூட்டிங் ★ ரெற்றோன் கொட்டன் துணிவகைகள்
★ யோ யோ ★ ரவுசர்
சிவகணேசன் ஸ்ரோர்ஸ் 41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-2234)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளவத்தை - முகத்துவாரம் கடற்பகுதி பாதுகாப்பு வலயம்

கொழும்பு, டிச. 5
கொழும்பு வெள்ளவத்தை பாலம் முதல் முகத்துவாரம் வரையிலான கடல் பிரதேசம் பாதுகாப்புக் வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பு கருதி இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வலய கடல் எல்லை குறித்து அடுத்த ஓரிரு தினங்களில் பாதுகாப்பு அமைச்சு உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் எனத் தெரியவருகிறது.

இந் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் வேறு இடங்களில் மீன்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என கடற்றொழில் நீர்வள அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

(ஐ-21)

## உரும்பிராய் விவசாயிகளுக்கு ம.எண்ணெய் வழங்கவில்லை

உரும்பிராய், டிச. 5
உரும்பிராய் பெற்றோல் நிலையத்தில் விவசாயிகளுக்கான மண்எண்ணெய் கடந்த ஒரு மாத காலமாக வழங்கப்படவில்லை என உரும்பிராய் விவசாயப் போதனாசிரியரிடம் இப்பகுதிகளைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்களின் செயலாளர்கள் முறையிட்டனர்.

உரும்பிராய் சமநலசேவை நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இம் முறைப்பாடு முன் வைக்கப்பட்டதுடன் இது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

மழை பெய்வதைக் காரணம் காட்டி விவசாயிகளுக்கு மண்எண்ணெய் விநியோகிக்க சம்பந்தப்பட்டோர் பின்னடிப்பதாகவும், இதேவேளை தனியார் வியாபாரிகளுக்கு மண்எண்ணெய் தாராளமாக விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் விவசாய சம்மேளனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-154)

## பிரதமர் பதவி விலகுவார் என்ற செய்திக்கு மறுப்பு

கொழும்பு, டிச. 5
பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள இருப்பதாகச் சில பத்திரிகைகளில் வெளியான செய்திகளை பிரதமரின் செயலாளர் ஹேமசிரி பெர்னாண்டோ மறுத்துள்ளார்.

டாக்டர்களின் ஆலோசனையின் படி பிரதமர் பொது வைபவங்களில் கலந்து கொள்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் அரச உத்தியோகபூர்வ வைபவங்களிலும், ராஜதந்திர சேவையுடன் தொடர்புடைய வைபவங்களிலும் அவர் தொடர்ந்து பங்கு பற்றி வருகிறார் என்று பிரதமரின் செயலாளர் தெரிவித்தார்.

பிரதமர் பதவி விலகவுள்ளார் என்றும், அதன் பின் அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, மகிந்தராஜபக்ஷ, சபாநாயகர் கே. பி. இரத்னாயக்க ஆகியோரில் ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படுவார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

(ஐ-21)

## சர்வதேச ஊனமுற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், டிச. 5
சர்வதேச ஊனமுற்றோர் தினவிழா நாளை சனிக்கிழமைமுற்பகல் 10 மணிக்கு கொழும்புத்துறை வீதி சுண்டிக்குளியில் உள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் சங்கத் தலைவர் வைத்தியக்கலாநிதி என். சிவராசா தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சங்கத்தால் நடத்தப்பட்ட கட்டுரை, வினாவிடைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

(ஐ - 9)

## பார்சல் குண்டு வெடித்து இராணுவச் சிப்பாய் பலி!

### காத்தான் குடியில் சம்பவம்

மட்டக்களப்பு, டிச. 5
மட்டக்களப்பு காத்தான் குடியில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டார்.

நள்ளிரவு 11.30 மணியளவில் இருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவதை அவதானித்த பொலீஸார் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அந்நபர்கள் கையில் வைத்திருந்த பார்சலை வீசிவிட்டு ஓடிவிட்டனர். உடனடியாக இராணுவ குண்டு செயலிழக்கும் பிரிவுக்கு தகவல் அனுப்பி வைக்கப்பட்டது.

இராணுவம் பார்சலை பரிசோதனை செய்த போது அது வெடித்துச் சிதறியதில் ஒருவர் கொல்லப்பட்டார்; 3 பேர் காயமடைந்தனர் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

## வரப்பிரகாஷ் மரணம்குறித்து நாடாளுமன்றப் பிரேரணை

கொழும்பு, டிச. 5
பகிடிவதை என்பது தீவிரவாதமாய் மாறிவிட்டது. எனவே இது கீழ்த்தரமான செயல் என்று பிரகடனப் படுத்த வேண்டும். பகிடிவதையில் ஈடுபடுவோர் குற்றவாளிகளாக இனங்காணப்பட வேண்டும். 'ராகிங்' இடம் பெறுவதை பூண்டோடு ஒழித்துக் கட்டும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

இவ்வாறு ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் கோங்கஹகே வரப்பிரகாஷ் மரணம் குறித்து நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்து பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் வரப்பிரகாஷ் பகிடிவதை மூலம் கொல்லப்பட்டது போன்ற பாதகச் செயல் இனிமேல் இடம்பெற அனுமதிக்கக் கூடாது.

மாணவர்கள் தமது உரிமைக்காக போராடுவது வேறு. அதனைக் கட்டுப்படுத்தக் கூடாது. ஆனால் இது வேறு. இந்தப் பகிடிவதை நிறுத்தப்பட வேண்டும். நாம் சமூக நன்மை கருதி இதனை ஒழிக்க சட்டதிட்டம் வகுக்க வேண்டும் — என்றார்.

ஐ. தே. க. உறுப்பினர் ஏ. எச். எம். அஸ்வர் பேசுகையில் —

இந்தப் பகிடிவதையில் இருந்து இளைய சமுதாயத்தை பாதுகாக்க வேண்டும். இவரின் மரணத்துக்கு உடந்தையாக இருந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எனவே அமைச்சர் இதனை முற்றாக ஒழிக்கச் சட்டம் கொண்டுவர வேண்டும். அல்லாது போனால் இம் மாதிரியான மரணங்கள் தொடரலாம் — என்றார்.

ஐ. தே. க. உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பேசுகையில் —

வரப்பிரகாஷ் மரணம் குறித்து அவர்களது குடும்பம் கொண்ட வேதனையை நான் அறிவேன். வரப்பிரகாஷ் மரணத்தறுவாயில் இருந்தது முதல் அவரின் கடைசிப் பயணம் வரை அவரதுகுடும்பத்தினர் பட்டவேதனைகள் கொஞ்சநஞ்சமல்ல.

இது ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இதனை கல்வி உயர்கல்வி அமைச்சர் கவனத்திலெடுக்க வேண்டும் — என்றார்.

இப் பிரேரணைக்கு பதிலளித்துப் பேசிய கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன —

பகிடிவதையில் ஈடுபடுதல், கல்வி நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் செய்தல், நிர்வாகத்தைக் குழப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக விரைவில் சட்டம் கொண்டுவரப்படும். இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் தலைவராக கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் சாவித்திரி குணசேகரா பணிபுரிகிறார் — என்றார்.

(ஐ-9)

## கூட்டுறவுப்பெரியார் வீரசிங்கம் நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிச. 5
கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 33 ஆவது நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும்,

கூட்டுறவாளர், பண்டிதர் க. நாகலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) எஸ். கே. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) கோ. திருநாவுக்கரசு, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனம்பொருள்) கே. பரநிருபசிங்கம் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்,

அமரர் வீரசிங்கம் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் அருட்தந்தை எஸ். டேமியன் வழங்குவார். கலை நிகழ்வுகளும் இடம் பெறும்,

(ஐ-9)

# சிவாச்சாரியர்களை உருவாக்கி அரிய சமயப்பணி புரிபவர்

## மஹாதேவக் குருக்களுக்கு இன்று மணிவிழா

சிவாகமபானு சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி வெள்ளிக்கிழமை இன்று அறுபது வயதைப் பூர்த்தி செய்கிறார்.

அவரது பரந்து கிடக்கும் சிஷ்ய சமுதாயத்தினரும், மக்கள், மருமக்கள், உறவினர்களும் அவருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி ஹோமத்தையும் மணி விழாவையும் எளிய முறையில் இன்று கொண்டாடுவதற்கு ஒழுங்கு செய்துள்ளார்கள்

ஒருவர் எத்தனை வருடம் வாழ்ந்தார் என்பதனை விட எப்படி வாழ்ந்தார் என்பதே முக்கியம். இங்கு எமது மஹாதேவக்குருக்கள் அவர்கள் தமது 60 வருடங்களில், பிள்ளைப்பிராயம் நீங்கிய ஏனைய காலங்களில் ஒவ்வொரு நாளும் சிவத் தொண்டிலும் சைவப் பணியிலும் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் ஆகிய அறு தொழில்களிலும் தமது வாழ்நாளைக் கழித்துள்ளார் என்பதற்குச் சான்றோர் சாட்சி.

இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிவாச்சாரிய சமூகத்திடையே ஒரு நலிவுற்ற நிலை இருந்து வந்தது. சமஸ்கிருதக் கல்வியைப் போதிக்க இங்கொருவர் அங்கொருவர் இருந்து வந்தாலும் ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள், கும்பாபிஷேகம் போன்ற சிவாகமக் கிரியைகளை நிகழ்த்துவதற்கு அந்தண வாலிபர்களுக்கு வழிகாட்டவும் பயிற்சியளிக்கவும் யாருமிருக்கவில்லை.

சமஸ்கிருதப் பாடசாலைகளில் சமஸ்கிருதமொழியைக் கற்றுக் கொடுத்தார்கள். இரண்டொரு இடத்தில் சில முக்கிய வேதமந்திரங்களையும்சொல்லிக்கொடுத்தார்கள் ஆனால் அந்தண இளைஞர்களுக்கு ஆலயக் கிரியைகளில் முறையான பயிற்சி கொடுக்கும் ஏற்பாடு ஓர் இடத்திலும் இருந்ததில்லை.

சிவாச்சாரியர்களுக்கு உறுதுணையான 'பத்ததிகள்' எல்லாமே கையெழுத்துப் பிரதிகளாக அவரவர் குடும்பத்தின் தேவைக்காக சிவாச்சாரியர் சிலரிடம் இருந்து வந்தன.

அத்தகைய "பத்ததிகள்" குடும்பத்திற்கு வெளியே மற்றவர்களுடைய பாவனைக்கு கொடுக்கப்படமாட்டாது. அதற்கு காரணமும் இருந்தது. இந்த கையெழுத்துப் "பத்ததிகள்" தொலைந்தால் அவற்றை மீள அமைக்க இயலாது.

இப்படியான ஒரு கால கட்டத்தில் சிவாகமபானு சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்கள் இணுவில் கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில் "மஹாசாஸ்தா குருகுலம்" என்ற பெயரில் குருகுலமொன்றை அமைத்து முறையான கல்வி போதித்து வருகிறார். இங்கு வேதாத்தியனம் உட்பட சிவாச்சாரியார் ஒருவருக்குத் தேவையான சகல கல்வியும் போதிக்கப்பட்டு வருகிறது.

சிவாகமபானு மஹாதேவக் குருக்கள் மிகவும் சிரமப்பட்டு ஆகம சம்பந்தமாக புராதனமான பத்ததிகள், பழைய புத்தகங்கள் முதலியவற்றைச் சேகரித்து தாமே வெகு சிரமத்துடன் பிரதி பண்ணி அவற்றில் தமது ஆராய்ச்சியை மேற்கொள்வதோடு தமது மாணவர்களுக்கும் அவற்றைப் புகட்டி வருகிறார்.

திருக்கேதீஸ்வரத்தில் முன்னர் ஒரு குருகுலம் நடத்தப்பட்டுவந்தது. சேர். கந்தையா வைத்தியநாதன், அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் முதலியோரது பெரு முயற்சியால் அது இயங்கி வந்தது. ஆனால் பின்னர் அது செயலிழந்து போய்விட்டது.

மஹாதேவக்குருக்கள் ஒரு தனிமனிதனாக மஹாசாஸ்தா குருகுலத்தை அமைத்து, சிவாச்சாரியர்களைப் பயிற்றுவிக்கும் முக்கியகைங்கரியத்தையே அதன் குறிக்கோளாகக் கொண்டு நடத்தி வருகிறார்.

ஆலயக் கிரியைகள் சம்பந்தமான கல்வியை சிவாச்சாரிய மாணவர்கள் கிரகிக்கக்கூடிய வாறு இலகுவாக அமைத்து குறுகிய காலத்திலும் பயிற்சி அளித்து வருகிறார்.

இந்தத் துறையில் புதிய வழிகளைக் கையாண்டு சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை மஹாதேவக்குருக்கள் அவர்களையே சாரும்.

மஹாதேவக் குருக்கள் சமயத்துக்கு ஆற்றும் தொண்டினைப் பாராட்டி அவர்களை நூறாண்டு வாழ வாழ்த்துவதற்கு [illegible]

— தி. நடனசபாபதிசர்மா

## அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிக்க தென்மராட்சியில் குழு

தென்மராட்சி, டிச. 5
தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்காமல் உள்ள அறநெறிப் பாடசாலைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கும், புதிய அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கும் ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்குமென ஏழு பேர் கொண்ட குழு பிரதேச செயலரினால் நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற இந்துப் பிரமுகர்களுக்கான கருத்தரங்கில் இக் குழு நியமிக்கப்பட்டது.

இக் குழுவின் தலைவராக சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்களும், செயலாளராக பிரதேச செயலக கலாசார அலுவலர் செல்வி ஆனந்தி சபாரத்தினமும், உறுப்பினர்களாக சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், டாக்டர் வ. சின்னப்பு, வித்தகம் குழு பரமசாமி, இந்து இளைஞர் பேரவைத் தலைவர் தனபாலன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய பஜாஜ் 4S சம்பியன், புதிய வெஸ்பா ஸ்கூட்டர் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.26, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [51589]

### உடன் விற்பனை

பிறிமா புறோயிலர் குஞ்சுகள், பிறிமா பிறவுண் வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [51561]

### தவறிவிட்டன

மா. கிருஷ்ணமூர்த்தி என்பரது 593421457X இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, தொழில்சார் அடையாள அட்டை என்பன நுணாவில் சந்திக்கும், கைதடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். அரசினர் மத்திய மருந்தகம், கைதடி. [51590]

### தேவை

10 அடி நீளமான கடைக்குரிய அலுமாரி தேவை. S. K. லங்காபதி, இல. 15, 1 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக) அல்லது புகையிரத வீதி, மல்லாகம். [51548]

புதிய, பழைய றோணியோ இயந்திரங்கள், நல்ல நிலையிலுள்ள தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மகேஸ்வரன், 25, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (றோணியோ வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்). [51587]

## தேவை

ஸ்ருடியோ வேலை சகலதும் தெரிந்த ஆண் ஒருவர் உடன்தேவை. 20 - 50 வயதிற்கும் இடைப்பட்டவராகவும், யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**ஊர்மிளா போட்டோ,**
3 ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
(சி/2254)

---

சித்தன்கேணி

# ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம் மண்டலாபிஷேக 45-ம் நாள் பூர்த்திப் பெருவிழா

சிவசீலர்களே!

05. 12. 97 வெள்ளி:

காலை 7 மணி முதல் - யாக பூஜை வழிபாடுகள்
பகல் 11 மணி - மஹா சங்காபிஷேகம்
நண்பகல் 12 மணி - அன்னதான நிகழ்வு
மாலை 4 மணி - திருக்கல்யாண வைபவம்
- தொடர்ந்து திருவீதியுலா

அனைவரும் வருக! சிவனருள் பெறுக.

உபயகாரர்
சி. சுப்பிரமணியம் குடும்பம்.

(51569)

---

இறைபணிச் செம்மல்

# உயர்திரு. ச. விநாயகரத்தினம் அவர்களின் மணி விழா

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனார்மடம்.

காலம்: 07 . 12 . 1997 மு. ப.10 . 00 (இலங்கை நேரம்)

விழா நாயகரது நண்பர்கள், உறவினர்கள் மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மணிவிழாச் சபையினர்

(51570)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 05 — 1912

மறைவு: 05 — 11 — 1997

## ஜெளரியேற்பிள்ளை செபமாலை (சுந்தரம்)

''உயிர்ப்பும் உயிரும் நானே; என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்''
- அரு. 11 : 25

இவரது ஆத்ம சாந்திக்காக 05-12-97 வெள்ளி காலை 7 மணிக்கு வடகோவை புனித சூசையப்பர் ஆலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்றைய திருப்பலியிலும், எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
மகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

திருமதி அருளப்பு சூசையம்மா,
அரசடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (51516)

---

# கே. ஏ. சுப்பிரமணியம் ஞாபகார்த்தக் கூட்டம்

இடம்: நாவலர் மண்டபம்
காலம்: 07—12—97 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 மணி

தலைவர்
கா. கதிர்காமநாதன்
(புதிய ஜனநாயகக் கட்சி வடபிரதேசச் செயலாளர்)

ஞாபகார்த்த உரைகள்
''20 ஆம் நூற்றாண்டில் சாதியம்''
R. துரைராசா (அ. லி. சே. சங்க உப செயலாளர்)
''மாக்சியமும் வெகுஜன அரசியலும்''
க. தணிகாசலம் (தாயகம் ஆசிரியர்)


அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஞாபகார்த்தக் குழு.

405, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (51580)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 14 — 09 — 1918

இறப்பு: 05 — 12 — 1996

## திருமதி தூரைமுத்து சவிராசி

ஓராண்டு ஓடி மறைந்ததம்மா!
ஈராண்டுகள் காணாத இடைவெளியானதம்மா!
எத்தனை ஆண்டுகளானாலும்!
இணைந்திடுவோம் கிறிஸ்துவுக் குள்!

வன்னியில் காலமான எமது தாயாரின் செய்தி கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கு எமது நன்றிகள்,

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல. 2, றக்காவீதி,
யாழ்ப்பாணம். (51560)

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கதிரவேலு ஆறுமுகம் (புங்குடுதீவு - 5)

மண்ணில்: 10—10—1917

விண்ணில்: 27 11—1995

திதி: 05—12—1997

அல்லும் பகலும் எம் உயர்வுக்காய்
உழைத்திட்ட எம் அன்புத்தெய்வமே!
ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறாது எங்கள் துயர் — என்றும்
எமது அன்பு உம்முடனே இருக்கும்
உயிர் உள்ளவரை பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆ. சாந்தலிங்கம் (மகன்),
12/3, சந்தனமாதா லேன்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம். (51518)

---


மக்கள் மனதில் தமக்கென ஒரு நீங்காத இடம் பிடித்த

# வீடியோ கலா மினி

தமது சேவையை விரிவு படுத்தும் நோக்குடன் சிங்கப்பூரிலிருந்து புதிய ரக கமராக்கள் வரவழைத்து திறம்பட நடத்தி வருகிறார்கள். மிக்சர்கள், புத்தம் புதிய பூப்புனித நீராட்டு விழாவிற்கென்றே விசேடமாக அமைக்கப்பட்ட சுழல் தாமரை, சுழல் ராட்டினம், மாடிப்படிசெற், பலவர்ணக்குடைகள். சுழல் நட்சத்திரம், அன்ன ஊஞ்சல், பிறை போன்ற பிரமாண்டமான செற் அமைத்து படப்பிடிப்புக்கு அழகு மிளிரச் செய்து வருகின்றார்கள். அத்துடன் தண்ணீர்த் தொட்டி வசதி இல்லாதோர்களுக்கென சுவிசில் இருந்து பிளாஸ்ரிக் தண்ணீர்த் தொட்டியும் வரவழைக்கப்பட்டுள்ளது.

அழகிய இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமைந்த சொகிகட்டான் மணப்பந்தல் சேவையும் நடத்தி வருகின்றார்கள். காட்சிகளுக்கேற்ப பல வர்ண ஆடைகள் மாற்றிப் படம் பிடிப்பதற்கென்றே எமது ஸ்தாபனத்தில் பூங்கா வசதியும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வீடியோ கலா மினி

அச்சுவேலி

யாழ். நகரில் தொடர்புகளுக்கு:

**கல்யாணி**
(பஸ் நிலையம் [illegible])
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ([illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர்
# அமரர் பொன்.நாகமணி ஓராண்டு நினைவு மலர்

## ஓராண்டு நினைவஞ்சலிப் பாடல்



### அமரர் பொன். நாகமணி

[சாவகச்சேரி, தென்மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மட்டுவில் தெற்கு, வளர்மதி சனசமூக நிலையததின் ஸ்தாபகரும், சமூக சேவைக்காகத் தனனை அர்ப பணித்தவரும், சங்கீத விறபனனரும்)

★ அழியாப் புகழுக்காய் மண்ணில்:
25 — 10 — 1936

★ திரும்பாத பயணத்திற்காக விண்ணில்:
05 — 12 — 1996

எம் ஊரின் காரிருளைக் கிழிக்க வந்த
மதிமுகமே!
உம் நினைவு எம்மில் என்றென்றும்
மறையாதையா!
நற்பணியால் நீயுயர்ந்தாய்
மாமனிதனானாய்!
வளர்மதியின் ஸ்தாபகராகவே உயர்ந்தாய்!
நின் பணி தொடர்ந்திடும் என்பது
காத்திருந்தோம்-நீயோ
உனக்கு நினைவஞ்சலி பாட எமை
ஆளாக்கிவிட்டு
இறைவனடி தானடைந்தீர்!
இதய மலர் தூவி இறைஞ்சி நிற்கின்றோம்.
உமது ஆத்மாவும் சாந்தி பெறும்.
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டு
சென்றாலும்
நின் நினைவுகளை என்றும்
மறப்பதற்கில்லை.

நிர்வாகம்
வளர்மதி சனசமூக நிலையம்.
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## என்றும் வாழும் தெய்வம்

நாகத்தின் மதிப்பு மணியால் உயர்வது போல் எம் சமுதாயத்தின் மதிப்பும் நாகமணியால் உயர்ந்துள்ளது. நல்லவரும் வல்லவரும் நடுவயதில் போவாராம்; அல்லாத பேரேர் அறுபதையும் தாண்டுவராம். இது நல்லவர், வல்லவருக்கு வகுத்த இலக்கணம் அது அமரர் நாகமணிக்கும் இலக்கியமாயுள்ளது.

இவர் வாழ்ந்த காலம் 50 வயதுதான் என்றால் அது பெரிய விடயமல்ல. 15 வயதினிலே புதிய சிந்தனைகளைத் தாங்கி நின்றவர். அன்று சமூக வளர்ச்சிக்குத் தாபனம் ஒன்று தேவை என்பதை உணர்ந்து நின்றவர். திசை மாறியாய் செந்தூரப்பூவாய் மணம் பரப்பியவர். நேர்மையாகப் பேசுந் திறனுடையவர். சொன்னபடி நடப்பவர்; அவரது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கும். ஏழ்மை மனமுடையவர் இதனால் ஒவ்வொருவரையும் தன்னைப்போல் நினைப்பவர். ஆழமான சிந்தனையுடையவர்.

இன்று வருடம் ஒன்று கடந்துவிட்டது. அது வரலாறாகிவிட்டது. வருங்காலத்தை தீர்மானிக்கும் அவரது தீர்க்கதரிசனம்தான் என்றும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

ஒருவரின் எச்சம் என்று சொல்லப்படுவது சந்ததி மட்டுமல்ல. அவர் விட்டுப்போன சேவைகளும் எச்சங்களுமாகும். அந்த வகையில் அமரர் நாகமணி அவர்கள் விட்டுச் சென்ற வளர்மதி சனசமூக நிலையம், சமூக ஒருங்கிணைப்பு மனப்பான்மை, விட்டுக் கொடுக்குந் திறன், நாட்டுப் பாடல் ஆர்வம், தன்னைப் போல் பிறரையும் நேசித்தல், ஜனரஞ்சகத் தொடர்புகள் என்பன எல்லாம் அவர் எமக்காக விட்டுச் சென்ற எச்சங்கள்.

ஐ. கமலநாதன்
ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி.

## கால்கோள் நாட்டியவர்

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வாக்கிற் கிணங்க மட்டுவில் எனும் சிற்றூரிலே தோன்றி, தனது அரும் பெருஞ் சேவைகளினால் அவ்வூர் மக்களின் மனதிலே நீங்கா இடம் பெற்றவர் அமரர் பொன். நாகமணி ஐயா அவர்கள்.

வளர்மதி சனசமூக நிலையமானது பல்துறைகளிலே தனது கிளைகளைப் பரப்பி இன்று மணங்கமழ ஆரம்ப அடி நாதமாக விளங்கியவர் இவரே யாவர். இன்று வளர்மதி சன சமூக நிலையத்தின் மாண்பிற்குக் காரணம் இவரது இளமைக் காலத்து தீர்க்கதரிசனமே என்பதில் மிகையேதும் இருக்காது. எமது சனசமூக நிலையத்தின் இன்றைய தன்னிகரில்லாத்தனிச்சிறப்பிற்குக் காரணம் அன்று அவர் நாட்டிய கால்கோள் தான் என்பது யாவரும் அறிந்த ஒன்றேயாகும்.

வளர்மதி சனசமூக நிலையத்தின் ஸ்தாபகரான அமரர் பொன். நாகமணி ஐயா அவர்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும, இந்நாளிலே அவரது சேவைகளை நினைவு கூர்வதோடு அவரது குடும்பத்தாரோடு சேர்ந்து நாமும் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோமாக.

வி. சி. மதியழகன்
தலைவர்,
வளர்மதி கல்விக் கழகம்.

## சேவையில் சிறந்தவர்

அமரராகிய பொன். நாகமணி அவர்கள் வளர்மதி சன சமூக நிலைய வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையின் மூலம் வளர்மதி வாழ் மக்கள் மனதிலே பதிந்துவிட்ட ஒருவர். சமூக வளர்ச்சிக்கு சன சமூக நிலையத்தை உருவாக்கியதோடு மட்டுமன்றி, நிலையத்தை கிளைபரப்பும் பெரும் விருட்சமாக விஸ்தரித்தார். கல்விக்கழகம், கலைக்கழகம், விளையாட்டுக் கழகம், மாதர் சங்கம் என இவரது செயற்பாடுகள் விரிவடைந்தன இதனால் அஞ்ஞானம் என்ற இருளை அகற்றும் ஞான ஒளி விளக்காகத் திகழ்ந்தார்.

விளையாட்டில் சிங்கம் போல் விளங்கி, நிலையத்திற்கு அழியாத புகழைப் பெற்றுத் தந்தார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை ஆர்வத்தோடு கற்றறிந்து எமது இளைஞர்களுக்கு கலைத்துறை ஆசானாகத் திகழ்ந்ததோடு, பல இளைஞர்கள் கலைஞர்களாகவும், கவிஞர்களாகவும், மிளிருவதற்குச் சேவையாற்றினார். இதனால் ஒரு கிராமத்தின் குருவாகப் பெரும் மதிப்புக்குரிய ஒருவராகத் திகழ்ந்தவர்.

சிறந்த மதி நுட்பமும், அயராத உழைப்பும், தளராத உறுதியும் கொண்டவர். எந்தவொரு செயற்பாட்டையும் நன்கு திட்ட மிட்டுச் செயற்படுத்தி வெற்றி வாகை சூடுவார்.

எமது சமூகத்தின் பாரம்பரிய விழுமியங்கள், நம்பிக்கைகள் எதுவானாலும் எமது மக்கள் இவரையே நாடிச் சென்றனர் இவ்வகையில் எமது கிராமத்திற்குக்கிடைத்த அரும் பெரும் பொக்கிஷமே அமரர் பொன். நாகமணி அவர்கள்.

இவ்வுலகில் பலர் தோன்றி மறைகின்றனர். ஆனாலும் ஒரு சிலரே கால ஓட்டத்தில் தமது அடிச்சுவடுகளைப்பதிய விட்டுச் சென்றுள்ளனர். இவர்களே தாங்கள் வாழ்ந்தகாலத்தில் ஏதோ ஒரு வகையால் சமுதாயத்தில் நெஞ்சத்தில் பொன் எழுத்துக்களால் பதியப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் தான் அமரர் பொன். நாகமணி அவர்கள்.

அன்னாரின் மறைவு எமது கிராமத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

மா. பார்த்தீபன்
பொதுச் செயலாளர்,
வளர்மதி சனசமூக நிலையம்.

## வளர்மதியை மலர்வித்த நாயகன்

தேன் பொழில் சூழ் தென்மட்டுவிலில் மலர்ந்திட்ட வளர்மதியின் ஸ்தாபகர் பொன். நாகமணி அவர்களின் நினைவுகள் ஆண்டாண்டு காலங்கள் அழியாத வரமாக அனைவர் மனங்களிலும் நிலைத்திடும். அமரர் அவர்கள் பொதுப் பணியே தன் இலட்சியமாகக் கொண்டு மட்டுவில் பதியில் வளர்மதியை மலர்வித்து அதன் மூலம் மக்களுக்கு வளமான பணிகள் பலவற்றைத் தளராத உறுதியுடன் உளமார ஆற்றுவதற்காகத் தன்னை அர்ப்பணித்த பெருந்தகை.

மட்டுவில் கிராமத்தில் தன் கடமைகளில் ஒன்றாக நற்கலைகளையும் வருவித்து பல நிகழ்வுகளை நிகழ்த்தி மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட விடிவெள்ளியாக விளங்கிய உன்னத நற்பணியாளர். மாணவ சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியவை. மாணவர்களது உடல், உள ஆற்றல்கள் வளர அன்னாரது அருமையான முயற்சிகள் அத்திவாரமாக அமைந்தன. இவரின் திறமை சார்ந்த பணிகளால் பயன் பெற்றோர் பலர். கல்வியைக் கண்ணாக மதித்து சித்தம் தெளிய சத்தான பல கருத்துக்களை எமக்கு முத்தாகத் தந்தவர். இவர் சொத்தாக அவை வித்தாகி விருட்சமாகி விழுதுகள் பல விட்டு அமரர் அவர் நினைவோடு என்றும் வளர்ந்து கொண்டே இருக்கும்.

வே. அன்பழகன்
பொருளாளர்,
வளர்மதி கல்வி நிலையம்,
ஆரம்பப்பிரிவு.

## மட்டுவில் தந்த மாமனிதன்

உலகின் பல்வேறு பாகங்களிலும் பல மாமனிதர்கள் உருவாகித் தம் மனிததத்துவத்தை வெளிப்படுத்திச் சென்றனர். அந்த வகையில் மட்டுவில் எனும் கிராமத்தின் தென்பால் வாழ்ந்த பொன். நாகமணி அவர்கள் அறிவினை ஆரம்ப நிலையில் மனிததத்துவத்தை மாண்புடன் போற்றியவர். இன்று பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம்வரை இவர் பெயர் பேசப்படும் மகிமை பெற்றுள்ளது. ஆயினும் இவர் கல்வியின் கலை நுணுக்கங்களில் திளைக்காத பாமர மனிதன் எனலாம்.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று கூறும் நிலைமாறி யாம் பெறாத கல்வியின்பத்தை இவ்வுலகு பெறவேண்டும் என தன்னலமின்றிச் செயல் புரிந்த பொன். நாகமணி அவர்கள் உள்ளத்தில் உதயமான வளர்மதி சன சமூக நிலையம் ஆயிரம் ஆயிரம் உள்ளங்களில் உறைந்து விட்ட பெயராகிவிட்டது.

மட்டுவிலில் இருந்தும் அயற் கிராமங்களில் இருந்தும் இந்நிலையத்தில், இதயமான கல்வி நிலையத்தில் கற்றுக்கடந்த மாணவர்கள் எண்ணிவிட முடியாத தொகையினர் எண்ணிக்கையினர் எனலாம். ஆரம்பக் கல்வி மாணவர்கள் தொடக்கம் கல்விப்பொதுத்தராதர பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை வரையான வகுப்புக்களை நடத்தி அவர்கள் அறிவை வளர்க்க அடியெடுத்துக் கொடுத்தவர். இன்று பல மாணவர்கள் பட்டதாரிகளாகவும், பல்கலைக்கழக மாணவர்களாகவும், உயர்தர மாணவர்களாகவும் ஆகுவதற்கு அவர்களின் திறமையை உயர்த்தி ஊக்கமளிக்கும் இந்நிறுவனத்தை நிலை நிறுத்திய பெரியோன் அம்மாணவர்கள் மனங்களில் மட்டுமன்றி அச்சமூகத்தோரின் மனங்களிலும் இனிது உறைந்து விளங்குகின்ற மாமனிதன் என்பேன்.

இத்தகு சிறப்பினைப் பெற்று புகழ்பூத்த பெரியோன், எம்மைவிட்டு இம் மண்ணைவிட்டு விண்ணுலகு புகுந்து அங்கு இத்தகு சேவை புரிய முற்பட்ட அறிவாளனுக்கு, இன்றுடன் விண்ணுலகு வாழ்வு ஓர் ஆண்டு அடைகின்றது. ஓர் அகவென்ன, எத்தனை எத்தனை ஆயிரம் அகவை ஆகட்டும் அத்தனை அகவைகளும் எம்மனதினில் நிறைந்திருக்கும் மாமனிதன் பொன். நாகமணி.

அவர்களுக்கு விண்ணுலக வாழ்வு மேலும் சிறக்க இறைவனை கனிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்,

ச, கிருஷ்ணன்
தலைவர்,
வளர்மதி சனசமூக நிலையம்,
மட்டுவில் தெற்கு.

## யதார்த்தவாதி பொன். நாகமணி

மட்டுவில் வளர்மதி ச.ச. நிலையத்தின் ஸ்தாபகர் அமரர் பொன். நாகமணி அவர்கள் ஒரு யதார்த்தவாதி. இவர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யதார்த்தமான அணுகுமுறைகளையே மேற்கொண்டதுடன், தான் சார்ந்த மக்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்துச் சனசமூக நிலையத்தை உருவாக்கினார். இம்மக்களின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் ஒரு சமூக நிறுவனத்தை ஊடகமாகப் பயன்படுத்தி வெற்றி கண்டவர். ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியாக வளர்மதி சனசமூக நிலையத்தைத் தனது காத்திரமான பங்களிப்பின் மூலம் வளர்த்து இன்று ஆலவிருட்சம் போல் வளர்ந்திருக்கும் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளும் இந்நிலையம் சார்ந்த மக்களின் வளர்ச்சியும் இவரது சேவைக்குச் சான்று பகர்கின்றன.

இந்நிலையம் நிமிர்ந்து நிற்கின்றவரை அமரர் பொன். நாகமணி அவர்களின் நினைவுகளும் நாதமணியாக ஓயாது ஒலித்துக் கொண்டே இருக்கும் என்பது உறுதி. இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க. வாசுதேவன், பீ. ஏ.
கிராம உத்தியோகத்தர்,
மட்டுவில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர்
# அமரர் பொன். நாகமணி ஓராண்டு நினைவு மலர்

## கிராமத்தை, மக்களை நேசித்த தலைவர்

''நாம் எவ்வளவு காலம் வாழ்வோம் என்பது முக்கியமன்று; எங்ஙனம் வாழ்கிறோம் என்பதே முக்கியம்.''

இந்த வாக்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டானவர் அமரர் பொன். நாகமணி அவர்கள்.

தென் மட்டுவில் பகுதியினிலே பொன்னர் சின்னம்மா தம்பதியினருக்கு மூத்த புத்திரராக உதித்து, தம்மக்களுக்கு அளப்பரிய சேவைகள் செய்து புகழ் பல சேர்த்து வளர்மதியாகி அமரத்துவம் எய்தி விட்டார் எங்கள் ஸ்தாபகர் பொன். நாகமணி.

தான் பிறந்த கிராமத்தையும் மக்களையும் நேசித்த ஒருவர் அவர். தாம் பிறந்து வாழும் கிராமத்தில் எதிர்காலத்தில் உருவாகப் போகும் சந்ததிகள் நற்பிரசைகளாக மட்டுமன்றி, சமூக, பொருளாதார, கல்வி, கலை, கலாசார மேம்பாடுடையவர்களாக உருவாக வேண்டுமென்றால் முதலில் கிராமத்திற்குத் தேவைப்படுவது எது? அக்கிராமத்தில் வாழும் மக்கள் மத்தியில் ஓர் எழுச்சியை உருவாக்க வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் ஏனைய கிராமங்களுடன் போட்டியிட்டு முன்னுக்கு வரவேண்டுமானால் எமக்கு முதலில் தேவையானது என்ன? என்பனவற்றை உணர்ந்து கொள்ள எம்மவர் மத்தியில் ஒற்றுமையும் புரிந்துணர்வு நிலையும் அவசியம் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். அந்த ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தக்கூடிய ஓர் அமைப்பே சனசமூக நிலையம் என ஆழச் சிந்தித்து சமூகத்திற்காகவே தன்னை உருவாக்கியவரே பொன். நாகமணி அவர்கள்.

இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மூன்று கூறுகளாகப் பிரிந்து பொருளாதார, கல்வி, கலாசாரம் போன்ற பல்வேறு பிரச்சினைகளால் பின்னடைவுற்று இருந்த எமது கிராமத்தை ஒன்று சேர்க்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தால் தானே முன்னின்று மூன்று பகுதி மக்களையும் ஒரே கோட்பாட்டின் கீழ் வழிநடத்த எல்லோருக்கும் பொதுவான ஒரு சனசமூக நிலையத்தை 1965 இல் உருவாக்கினார். அந்நிலையத்திற்கு ''வளர்மதி'' என்ற பெயர்சூட்டி தானே தலைமை வகித்து எமது மக்களை வழிநடத்தி எமது கிராம மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய ஒரு விடிவெள்ளி இவராவார். இதனால் பலரதும் பாராட்டுக்கும் மரியாதைக்கும் உரியவரானார். அன்று தொட்டு இன்றுவரை வளர்மதி சனசமூக நிலையம் தென்மராட்சியில் சிறந்த நிலையில் செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இவரின் கீழ் அரும்பிய வளர்மதி என்ற மலர் மொட்டானது; இன்று இதழ் விரித்து, வளர்மதி சனசமூகநிலையம், வளர்மதி கல்விக் கழகம், வளர்மதிவிளையாட்டுக் கழகம், வளர்மதி கலைக்குழு, வளர்மதி மாதர் சங்கம், வளர்மதி பாலர் கழகம் என சமூகத்தில் மணம் வீசுகின்றது.

இவர் சங்கீத விற்பன்னராக இருந்ததால் சனசமூக நிலையக் கலை நிகழ்ச்சிகளிலும், வீடுகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி தனது சங்கீத ஞானத்தை வெளிப்படுத்தியதுடன் அனைவரையும் இதில் ஈடுபாடு உடையவர்களாக்கினார். மனதில் நல்ல சிந்தனையும் உதவி செய்யும் மனப்பாங்கும், அறிவுரைகள் கூறுவதும் இவரின் சிறிய பண்புகளாகும்.

தமது கிராமமான மட்டுவிலில் ஒரு நல்ல சமாதான தந்தையாக இருந்துள்ளார். மற்றவர்களுக்கு உதவுவதில் இவருக்கு நிகர் எவரும் இல்லை. மற்றவர்களுக்கு எங்கு எப்போது உதவி வழங்கலாம் என்று காத்திருந்து உதவுவார். மற்றவர்களின் துன்ப நிலையைக் கண்டால் தனது எந்த வேலையை விட்டும் அவர்களுக்கு உதவுவதில் முன் நிற்பார். சிறு பிள்ளைகளில் மிக அக்கறையுள்ளவர். விதவைத் தாய்மார்களுக்கும், வறிய குடும்பங்களுக்கும் அவர்களின் பிள்ளைகளின் கல்விக்கும் தன்னால் ஆன உதவிகளைச் செய்து வந்தவர்.

இவ்வாறாக உழைப்பால் எமது கிராமத்தை உயர வைத்த உத்தமர் 1996 மார்கழி 5 ஆம் திகதி இறைவனடி சேர்ந்து இன்றுடன் ஓராண்டு புரண்டோடி விட்டது.

இந்த ஓராண்டு நிறைவில் வளர்மதியின் ஸ்தாபகர் அமரர் பொன். நாகமணி அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

★ வாழ்க உமது பணிகள் ★

பொ. இ. ஜனதன்
வளர்மதி சனசமூக நிலையப்
பொருளாளர்.
(விளம்பர இல. சி/ 2243)

## சேற்றிலே முளைத்த செந்தாமரையே!

1990 களில சமூக ஒடுக்கு முறைகளின் பாதிப்பினால் மாறுபட்ட கருத்துக்களுடன் நான் பெரிது நீ பெரிது என வாழ்ந்த மக்களுக்கு நானும் பெரிதல்ல நீயும் பெரிதல்ல ஒன்றுபட்ட சமூகமே பெரிதென அறிவூட்டி, அரவணைத்து, ஆதரவளித்து வளர்மதியின் நிழலில் ஒரு தாய் மக்களாக்கிய ஆலவிருட்சமே! நீ வளர்மதியின் தந்தையாக அதன் தலைவனாக அதன் செயல்வீரனாக மட்டும் இருக்கவில்லை. உன் விழுதுகளின் வளர்ச்சிக்கும் வழிவிட்டு சாதாரண அங்கத்தவனாகவும் வாழ்ந்திருக்கின்றாய்; வாழ்ந்து காட்டியிருக்கின்றாய். உன் நாமம் இன்று மட்டுவிலில் மட்டுமல்ல வளர்மதியின் குழந்தைகள் வாழும் உலக நாடுகளில் எல்லாம் கேட்கிறது. நீமறைந்து ஈராறு மாதங்கள் புரண்டோடும் இந்நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வெளிநாட்டு வளர்மதி நற்பணி மன்றங்கள்
(சுவிஸ், கனடா, நோர்வே, லண்டன், டென்மார்க், ஜேர்மன், பிரான்ஸ்)

## தீர்க்கதரிசனம் மிக்க வழிகாட்டி

மட்டுவில், வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பல விழாக்களில் நான் கலந்து கொண்டதன் நிமித்தம், இச் சனசமூக நிலையத்தின் ஸ்தாபகராகிய அமரர் பொன். நாகமணி அவர்களைப் பற்றி என்னால் அறியக் கூடியதாக இருந்தது.

இவருடன் கலந்துரையாடிய சந்தர்ப்பங்களில் இவரது தீர்க்கதரிசனம் மிக்க எண்ணங்களும், சிந்தனைகளும் அவர் உயிருடன் வாழ்ந்த காலங்களிலே பல செயல் வடிவம் பெற்றுள்ளன என்பதை வளர்மதி சனசமூக நிலையத்தின் வளர்ச்சியினையும், இந்நிலையம் சார்ந்தமக்களின் கல்வி, சமூக, பொருளாதார வளர்ச்சிகளையும் அளவு கோலாகக் கொண்டு அளவிடக் கூடியதாக உள்ளன.

இவரது இழப்பு மட்டுவில் பகுதிக்கு மட்டுமல்ல, குறிப்பாகத் தென்மராட்சிப் பிரதேசத்திற்கே பேரிழப்பாகும். இவரது சேவையினை முன்மாதிரியாகக் கொண்டு மேலும் பல தலைவர்கள் உருவாக இவரது வாழ்க்கை உதாரணமாக அமைந்துள்ளது என்பதை நினைவுபடுத்துவதோடு, இவரது ஆத்மா சாந்தியடைய இந்த ஓராண்டு நிறைவு தினத்தில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பு. சுந்தரம்பிள்ளை
பிரதேச செயலர்,
சாவகச்சேரி

## நெடுந்தீவு படகுப் பயணிகள் மழையில் நனைகின்றனர்

நெடுந்தீவு, டிச. 5

தற்சமயம் பெய்துவரும் பலத்த மழையினாலும் கடற்கொந்தளிப்பினாலும் நெடுந்தீவில் இருந்து வரும் படகுப் பயணிகள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

கூடாரங்கள் அற்ற திறந்த படகுகளே சேவையில் ஈடுபடுவதால் பயணிகளும் அவர்கள் எடுத்து வரும் பொருள்களும் மழையிலும் கடல் நீரிலும் நனைய வேண்டியுள்ளது.

அரசாங்கப்படகு சேவை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அதன் சேவை ஆரம்பமாவது குறித்து சரியான தகவல்கள் கிடைக்காததால் பொதுமக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர். (ஐ-111)

## கூ.சங்க தையலகம்

அரியாலை, டிச. 5

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தையலகம் தற்போது ஸ்ரான்லி வீதியில் உள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த தையலகம் முன்னர் சிறாம்பியடி வீதியில் உள்ள மணியம் கட்டடத்தில்இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)


## புதிய நாவலர் கல்வி நிலையம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 1998

ஆண்டு 1 முதல் O/L வரை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
10 - 12 - 97
புதன் பிற்பகல் 3 மணி

★ யாழ். மாவட்ட, இன்றைய நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை எமது நிறுவனத்தில் மட்டுமே.

(51598)



## NEW SCIENCE ACADEMY
NALLUR

புதிய நிர்வாகக் கட்டமைப்புடன்!

1998 கல்வி ஆண்டிற்கான புதிய பிரிவுகள்

15 - 12 - 97 இல் ஆரம்பமாகின்றன

ஆண்டுகள் 4, 5, 6, 7, 8, 9, 10, O/L

★ கணிதம்:- திரு. ஜெயக்குமார், திரு. யோகேஸ்வரன்
★ விஞ்ஞானம்:- திரு. லோகநாதன், திரு. கருணாகரன் திரு. கபசிலன்
★ தமிழ்:- திரு. தங்கராஜா, திரு. ஜெயபால்
★ ஆங்கிலம்:- திரு. இரவீந்திரன், திரு. செல்வரட்ணம்
★ வரலாறும், சமூகக்கல்வியும்:- திரு. கோபி, திரு. பத்மநாதன்

9, 10, O/L பிரத்தியேக கணிதம்
திரு. தயாளன்

ஆண்டு: 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்புகள் 15 விசேட பயிற்சிப் பரீட்சைகளுடன் ஆரம்பமாகிறது.

ஆசிரியர்: சரா

குறிப்பு: தற்பொழுது கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் 5 ஆம் திகதி பி. பகல் 3-30 மணிக்கு தவறாது வருகை தரவும்.

இயக்குநர்

(சி-2253)



## மஹாதேவ குருவே வாழி!

வண்ணை நகர் நாவலரின் வழியே நின்று
கண்ணினைப் போல் நான்மறையும் தமிழ்மறையும்
- காத்து நிற்போன்
எண்ணரிய குடமுழுக்கு, பெருவிழாக்கள் எழிலுறவே
தலைமையுற நடாத்தி வைக்கும்
தண்மையுறு மஹாதேவக் குருவே நின்தன்
மணிவிழாச் சிறப்புறவே மணிகண்டன் தாள்
பணிவோம்

ஆறுபத்து அகவைதனின் நிறைவில் இன்று
அகமகிழ்ந்திருக்கும் நீவிர்
நீறு கொண்டிலங்கும் மேனி
நின்மலன் தன் தண்ணருளால்
பேறு பதினாறும் பெற்று
பெரு வாழ்வு வாழ்கவென
மாறுகிலாத் தையல் பங்கன்
தாளிணைகள் வழுத்துகின்றோம்.

சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள்
வண்ணை. வைத்தீஸ்வரன் கோயில்,
யாழ்ப்பாணம்.

(51573)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களகரமான திறப்பு விழா

மலரும் கார்த்திகை 20 ஆம் திகதி (5 - 12 - 97) இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணி சுப வேளையில்

## மீரா நகையகம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைப்பதால் நகைப்பிரியர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.

**மீரா நகையகம்**
**பீச்றோட், யாழ்ப்பாணம்.**

(22 கரட் தங்க நகைகளை ஓடர் கொடுத்து உடனுக்கு உடன் பெற்றுக்கொள்ளலாம்).

(51513)


# 10-ம் ஆண்டு நினைவலைகள்

## திருமதி நடராசா செல்லம்மா
(05 - 12 - 1997)

''திரு'' வுடன் ''வாணி'' உடன் - இருக்கும்
அழகிய குக் கிராமம்
செல்லம்மா எனும் தெய்வம் - அப்பாவாம்
கைலை உறை தெய்வ பெயருடன்
அழகாக வந்துதித்த நான்கு · குழந்தைகள்
அன்பினால் கட்டுண்டு பரிவுடன் வளர்ந்தனர்
நிலவொளியில் சோறூட்டி - கண்மணியாய்
காத்து நின்றாள் இவர் - அன்னை
நில்லாது உழைத்து வந்து நீங்காது
உறவாடினார் இவர் தந்தை.

இடியாய் விழுந்தது எம் - மண்ணில்
இன்னல் நிறை இனப்பிரச்சினை
பிரித்தது அன்னையை - அறிஞரே
அறியா புற்றுநோய் ஒன்று
கட்டிலில் தந்தையை ஏற்றியது - மற்றொன்று
வாடினர் கண்மணிகள் ஆணிவேரின்றி
தசம் ஆண்டு ஆன பின்னும்
அழுகின்றோம் உனை நினைந்து.

- குடும்பத்தினர்

திருவாதணி,
உடுப்பிட்டி.

(51583)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி தயாரூபி கோவிந்தராசா
(நுண்கலைப் பட்டதாரி ஆசிரியை, யா / சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்)

மலர்வு: **09—12—1966**
உதிர்வு: **16—11—1996**

திதி: 05-12-1997

அன்பே என்னாருயிரே, அருமைரூபி!
எம்மை நீ பெருவாழ்வு வாழ வைத்தாய்.
எம்சுகமே உன்சுக மென்றெண்ணி வாழ்ந்தாய்.
கண்ணை இமைகாப்பதுபோல் எம்மைக் காத்தாய்;
எம்மை எல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டாய்.

உன் நினைவால் வாடும்!
கணவன்,
தாய், சகோதரி.

(சி/2248)

# சிறுமிகளுக்கான சீருடைகள்

உடுவில் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரையான பெண் பிள்ளைகளுக்கான இவ் வருடத்துக்குரிய சீருடைகள் நேற்று முன்தினம் உடுவில் கல்விக்கோட்டத்தில் வைத்து பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஏனைய பிரிவு மாணவர்களுக்கான சீருடைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த போதிலும் பெண் சிறார்களுக்கான சீருடைகள் தற்போதுதான் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-152)

# பிரதேச செயலகத்துக்கு மின்

தென்மராட்சி, டிச. 5

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு பகல் வேளையில் மின்சாரம் வழங்கப்படுகிறது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி ஜெனரேற்றர் மூலமே மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகப்பிரதேசசெயலர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-117)

# அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம**
**இலங்கை**
**விஞ்ஞான பீடம்**

முதலாம் அரையாண்டு
இரண்டாம்
அரையாண்டு
பரீட்சைகள் — 1997
(டிசம்பர்)

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு, இரண்டாம் அரையாண்டு 1996
விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு, இரண்டாம் அரையாண்டு 1995 (மீள்)
விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு, முதலாம் அரையாண்டு 1996
விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு, இரண்டாம் அரையாண்டு 1995 (மீள்)
விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்வு, முதலாம் அரையாண்டு 1996
விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்வு, இரண்டாம் அரையாண்டு 1995
விஞ்ஞானத்தில் சிறப்புத் தேர்வு 1995

மேற்குறிக்கப்பட்ட பரீட்சைகள் 1997-12-22 ஆம் திகதி ஆரம்பமாகும். மாணவர்கள் பரீட்சைக்குரிய பரீட்சை விண்ணப்பப்படிவங்களை உரிய கட்டணபற்றுச் சீட்டுடன் 1997-12-15 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எந்தெந்த பாட விதான அலகுகளில் பரீட்சை நடைபெறும் என்ற விவரக் கொத்தையும் பரீட்சை விண்ணப்பப்படிவங்களையும் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர்

(சி/2249)

# வங்கியாளர் சங்கம்
# யாழ். மாவட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் **17-12-97** (புதன்கிழமை) அன்று பி. ப. 3 மணிக்கு இலங்கை வங்கி யாழ். பிரதேச காரியாலயத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு சகல உறுப்பினர்களும் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

- தலைவர்

(சி/ 2256)

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய
# நூற்றாண்டு நிகழ்வு

ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
நடத்திய
**வினாவிடைப்போட்டி-பரிசளிப்பு**

காலம்: 05 12—97 வெள்ளிக்கிழமை காலை 10 மணி
ஆகக்கூடிய மாணவிகள் பங்குபற்றியமைந்த TAPE RECORDER ஒன்றை யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசாவிடம் சுவாமி சித்ரூபானந்தா கையளிப்பார்.

- செயலாளர்

(சி-2241)

# வெள்ளிவிழாக் கண்ட ஆசிரியர்களை
# வாழ்த்துகிறோம்

ஆசிரிய சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்புடன் சேவையாற்றி ஆசிரிய சேவையில் பெரும் பகுதியை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் நல்லாசிரியர்களின் சேவையைப் பாராட்டுவதில் பெருமை அடைகின்றோம்.

1. திருமதி ச. யோகரத்தினம்
(ஆங்கிலம் - விசேட பயிற்சி)
2. திரு. இ. ஜோர்ஜ்
(விஞ்ஞானம் - விசேட பயிற்சி)
3. செல்வி நே. சங்கரப்பிள்ளை
(உயிரியல் விஞ்ஞானம்- கல்வியியல் டிப்ளோமா)
4. திருமதி க. சச்சிதானந்தன்
(விஞ்ஞானம் - விசேட பயிற்சி)
5. திரு. சி. மகேந்திரன்
(கணிதம் - விசேட பயிற்சி)
6. திரு. சி. சிவஞானராஜா
(சங்கீதம் - விசேட பயிற்சி)
7. திரு. க. உதயபாலன்
(பௌதிக விஞ்ஞானம்- கல்வியியல் டிப்ளோமா)

**ஆசிரியர் கழகம்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**சுன்னாகம்.**

(51577)

# 365 ஆம் நாள் நினைவஞ்சலி

## அருந்தவராஜா கிருஷ்ணா

தம்பி கிருஷ்ணா, உற்றார் உவந்திட வாழ்ந்தீர்; உமது பணிவான பணி, உம் பெயர், ஊர் அறியும். அவலத்திலும் துயரத்திலும் பங்கு கொண்டு ஊருக்கு உகந்த பிள்ளையாய் வாழ்ந்தீர். பாட்டில் நீர் வலிது என்பர், அது விதியானால் மதியும் மயங்கிடும் என்பர்,

சென்.ஜோன் அம்புலன்ஸ் அத்தியட்சகரே! விநாயகருக்கு, அம்மனுக்கு மலர்மாலைகள் அணிய உமது கரங்கள் உதவின. ''நம்மால் உதவ முடிந்தது கண்ணீர்ப் பூக்களே'' உமது விநாயக ஷஷ்டியும், விரதமும், உமது 21 வயதும் அன்றே பூர்த்தியானதே. அன்பின் கிருஷ்ணா உமது பணிதொடர ஆசை மாமா, மாமி, மாமன், மாமிமார், அத்தான்மார், அக்காமார், நண்பர்கள் உதவிடுவோம் என்கின்றனர். அப்பா, அம்மா, சகோதரர், படை அணியினர் அயரமாட்டோம் என்கின்றனர்.

- குடும்பத்தினர்

69, சீனியர் லேன்,
கலட்டி.

(51543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்கி கல்வி நிலையம்

கட்டுடை, கிளை: தொட்டிலடி

### புதிய கல்வியாண்டு - 1998

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

05 – 12 – 1997

வெள்ளிக்கிழமை மாலை 3 30 மணி

**ஆண்டு 3 முதல் A/L வரை**

எமது வழமையான சிறப்பு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் போதிக்கப்படுகிறது.

★ மிகவும் சிறந்த பெறு பேறுகளை ஒவ்வொரு வருடமும் கொடுக்கும் ஒரே ஒரு கல்வி நிலையம்.

(49860) - நிர்வாகி


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும், நன்றிநவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 | 05 |
| 06 | 11 |
| 1810 | 1997 |

### அமரர் முருகர் கந்தையா

[ அராலி வடக்கு, செட்டியாமடம், வட்டுக்கோட்டை. ]

அமரர் கந்தையாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து சகல வழிகளிலும் உதவியவர்களுக்கு குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 05 - 12 - 97 வெள்ளிக்கிழமை 10. 00 மணியளவில் நடைபெறும் சபீண்டீகரண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைக.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

க. இராஜட்ணம்,
அராலி வடக்கு, [சி/2255]

## நிறுவுநர் விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிச. 5

மட்டுவில் தேனொளி மாதர் மன்றத்தின் நிறுவுநர் விழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருமதி ம. செல்லையா தலைமையில் நடைபெறும்.

மாதர் மன்ற நிறுவுநர் அமரர் பெரும் புலவர் ச. பொன்னுத்துரை நினைவுப் பேருரையை செல்வி தனா கந்தையா வழங்குவார்.

பண்டிதர் ம.ந. கடம்பேஸ்வரன் எழுதிய ''பொற்கலசம்'' நூல் வெளியிடப்படும், மன்றத் தலைவர் வெளியீட்டுரையை வழங்குவார்.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் ஐ. கமலநாதனின் நயவுரையைத் தொடர்ந்து பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஐ-8)

## பொலீஸாரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, டிச 5

படகில் தேடுதல் நடத்தச் சென்ற சமயம் கடலில் மூழ்கிக் காணாமற் போன பொலீஸார் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

கின்னியாவில் இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கைக்காக சென்று கொண்டிருந்த சமயம் இவர் துப்பாக்கியுடன் தவறி வீழ்ந்து கடலில் மூழ்கி விட்டார். (ஐ-21)

## பாலர் ஆசிரியர் கருத்தரங்கு

வலிகாமம், தெற்கு, டிச. 5

வலிகாமம் தெற்குசனசமூக நிலையங்களின் சமாசத்துக் குட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணியளவில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

உடுவில், தெல்லிப்பழைக் கல்விக்கோட்டங்களின் ஆசிரிய ஆலோசகர்கள் இதில் கருத்துரை வழங்குவர்.

பாலர் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு மேற்படி சமாசங்களின் தலைவர் அ. தேவச்சந்திரன் கேட்டுள்ளார். (ஐ-152)

குரும்பசிட்டி பெற்றுத் தந்த 'கலைஞகன்'

## அருளம்பலம் சிவதாசன்

அவர்கள் சிவபதம் அடைந்த

## 60 ஆம் நாள் நினைவஞ்சலிக்கூட்டம்

**இடம்:** வயாவிளான் ம. ம. வி, உரும்பிராய்

**காலம்:** 07—12—1997 ஞாயிறு காலை 11. 00 மணி

ஞாபகார்த்த உரை:-
கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

அஞ்சலி உரை:- திரு. T. V. கிருஸ்ணசாமி
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

சமூக ஜோதி சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன்
(தலைவர், மல்லாகம் கி. அ. சங்கம்)

திரு. K T. பாலசுப்பிரமணியம்
(பிரதமபொறியலாளர், ரெலிக்கொம், யாழ்ப்பாணம்)

உறவினர்கள், ஊர்மக்கள், அனுதாபிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குரும்பசிட்டி கி. அ. சங்கம்,
குரும்பசிட்டி மாதர் அ. சங்கம்.

வளர்மதி ச. ச. நிலையம்,
நலிவுற்றோர் நலனோன்பு நிலையம். (51594)

## யாழ். மத்திய கல்லூரி

**வர்த்தக மாணவர் மன்றத்தின்**

### வணிக விழாவும் "மத்திய வணிகம்" மலர் வெளியீட்டு விழாவும்

இடம்: தும்பர் மண்டபம்

காலம்: 05-12-1997 (வெள்ளி) காலை 9 30 மணி (புதிய நேரம்)

### நிகழ்ச்சி அமைப்பு

மங்கள விளக்கேற்றல்
மன்றக் கீதம்
வரவேற்புரை: செல்வன் க. யுதிஸ்டிரன்
தலைமையுரை: செல்வன் ஜெ. பிரதாபன்
ஆசியுரை: திரு. க. இராசதுரை (அதிபர்)
கௌரவ உரை: திரு. N. நாகேந்திரம் (ஆசிரியர்)
வாழ்த்துரைகள்; சிறப்பு விருந்தினர்கள்
திரு. க. ஜெயரட்ணம் (அதிபர், யாழ். தொழில் நுட்பக்கல்லூரி)
செல்வி நி. சண்முகம் (முதுநிலை விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
கௌரவ விருந்தினர்கள்: செல்வி பொன். செல்லையா (முன்னாள் ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி)
திரு. வ. க. பாலசுப்பிரமணியம் (உதவிக் கல்விப் பணிப்பாளர், வர்த்தகம்)
வெளியீட்டுரை: பிரதம விருந்தினர்
திரு. சு. இரத்தினராசா (கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம் 1)
ஆய்வுரை: திரு. இ. நந்தகுமாரன் (முதுநிலை விரிவுரையாளர், பொருளியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
பதிலுரை: செல்வன் கு. விசாகேசசர்மா
ஏற்புரை: திரு. சு. நடராசா (மன்றப் பொறுப்பாசிரியர்)
நன்றியுரை: செல்வன் அ. துஷ்யந்தன்

### கலை நிகழ்வுகள்

நகைச் சுவை உரையாடல்
Mr. JAFFNA (நாடகம்)
இன்றைய அவலங்கள் (உரைச்சித்திரம்)
இன்னிசைக் கானம்
கல்லூரிக் கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

வர்த்தக மாணவ மன்றம்,
யாழ். மத்திய கல்லூரி


விளம்பர அன்பளிப்பு:



S·M·FERNANDO

(51591)



# BASF

## விவசாயிகளே இதோ!

## பி(F)ன் பொஸ் 40

★ நெல் இலைமடிச்சுக்கட்டி ★ இலை சுருட்டிப்புழு
★ சந்துகுத்தி ★ இலையரிபுழுக்களுக்கும்
★ உருளைக்கிழங்குச் செய்கையில் கறையான்
★ எறும்பு போன்றனவற்றைக் கட்டுப்படுத்த அதிசிறந்தது

**பின்பொஸ்**

மற்றுமொரு கிருமிநாசனி

**டயசின்**

பின்கெம் நிறுவனத்தினால் விநியோகிக்கப்படுகின்றது

விவசாய இரசாயன விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

BASF Finlay (pvt.) Ltd,
186 Vauxhall Street, Colombo – 2

(பீடை கொல்லிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும்)

(சி/2258)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குதிரைக்கு முன்னால் வண்டி?

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல உள்ளூராட்சி சபைகளுக்கு மான தேர்தல் நடைபெறும். அதன் பொருட்டு வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் இம் மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் —

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் அறிவித்தார். மின்னாமல் முழங்காமல் வந்த இந்த அறிவிப்பை யாழ்ப்பாண மக்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

இதற்கு முன்னர், இந்த வருடம் மார்ச் மாதத்திலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டதாயினும் அது செயலாகவில்லை. தேர்தலுக்கான சூழ்நிலை அப்போது இல்லை என்றும், அரசியல் நடவடிக்கைகள் அறவே இல்லாத சூன்யச் சூழலில் தேர்தல் அர்த்தமற்றது என்று பலதரப்புகளும் அப்போது அரசுக்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தன. தமிழ் அமைப்புகளும் இவற்றில் அடங்கும். அதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தும் எண்ணம் கைவிடப்பட்டது.

இப்போது பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலை மீண்டும் வந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலும் சரி, கிளிநொச்சியிலும் சரி நீண்ட காலமாகத் தேர்தல்கள் நடைபெறவில்லை என்பது உண்மையே உள்ளூராட்சி அமைப்புகள் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு இல்லாமலேயே அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. என்பதும் பாதிப்பான நிலையே.

ஆனால் தேர்தல் ஒன்றை நடத்தக் கூடிய அளவுக்கு மக்களின் வாழ்க்கை நிலை நிறைவான இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை என்ற யதார்த்தத்தை மறந்து விட முடியாதே! மக்கள் தேர்தல் களத்தில் நிம்மதியாகக் கலந்து கொள்ளும் அளவுக்கு பூரண அமைதி திரும்பிவிட்டதாகவும் சொல்வதற்கில்லை.

யாழ்ப்பாணத்தில் இப்போது ஒரு தேர்தல் நடைபெறுவதானால் அது சுதந்திரமான, மக்கள் மனப்பூர்வமாகக் கலந்து கொள்ளும் தேர்தலாக அன்றி —

யாழ்ப்பாணத்திலும் தேர்தல் நடத்தப்பட்டது என்று பெயரளவில் கூறிக் கொள்வதற்கான, காட்டிக் கொள்வதற்கான — திணிக்கப்பட்ட தேர்தலாகவே — அமையும்.

1994 ஆம் ஆண்டில் கிழக்கிலங்கையில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்று அப்போதைய ஐ. தே. க. அரசு விடாப்பிடியாக நின்றது. அந்த வருடம் மார்ச் மாதத்தில் மக்கள் விருப்பத்துக்கு மாறாகத் தேர்தலையும் நடத்தியது. அது திணிக்கப்பட்ட தேர்தல் என்று தெரிவித்து, அப்போதைய எதிர்க்கட்சியான ஸ்ரீ. ல. சு. கட்சி மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்தவில்லை.

அடுத்த வருட முற்பகுதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு நிறைவேற்றப்படும் என்ற ஒலிநாடா அரச தரப்பில் சதா மீட்டப்படுகிறது. அந்தப் பிரதான பிரச்சினை தீர்ந்தால் மட்டுமே வடக்கு — கிழக்கில் உண்மையான அமைதி நிலவும். அதன் பின்னர் தேர்தல் நடைபெறுமாயின் அதுவே உண்மையான, ஜனநாயக ரீதியான தேர்தலாகவும் அமையும்; மக்களும் தொல்லை என்று கருதாமல் மனப்பூர்வமாகக் கலந்துகொள்வர்.

பிரதான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர், உகந்த சூழ்நிலை உருவாகு முன்னர், யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த முனைவது குதிரைக்கு முன்னாலே வண்டியைப் பூட்டுவது போலாகும்.

# புலிகளின் படகுகள் என நினைத்தே ஈ.பி.டி.பி. படகுகள் மீது சுட்டோம்

## மரண விசாரணையில் கடற்படைச் சிப்பாய் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிச. 5

''நாம் படகில் சென்று கொண்டிருந்த சமயம் கடற்பரப்பில் சில படகுகள் வருவதைக் கண்டோம். அப் படகுகளைக் கண்காணித்த போது அப்படகுகளில் இருந்தவர்கள் வயர்லஸ் மூலம் கதைத்துக் கொண்டுவந்தனர். அவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் எனக்கருதி துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம்''.

கடந்த 22 ஆம் திகதி ஊர்காவற்றுறைக் கடற்பரப் பரப்பில் கடற்படையினருக்கும், ஈ. பி. டி. பியினருக்கும் இடையில் நடந்த மோதலில் உயிரிழந்த ஆதம்பிள்ளை அஸ்வத்தின் மரண விசாரணையில் சாட்சியம் அளிக்கையில் கடற்படைச் சிப்பாயான முதியான்சலாகே சரத் பண்டார என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறையில் நடந்த அமர்வு நீதிமன்றத்தில் இந்த மரண விசாரணை பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் நடந்தது.

கடற்படைச் சிப்பாய் சரத் விஜித் பண்டார சாட்சியம் அளிக்கையில் மேலும் கூறியதாவது!–

சம்பவதினம் நாம் படகில் சென்றுகொண்டிருந்த சமயம் கடற்பரப்பில் வேறும் சில படகுகள் வருவதைக் கண்டோம்.

நாம் அப்படகுகளைக் கண்காணித்தபோது அப் படகில் வந்தவர்கள் வயர்லஸ் மூலம் கதைத்துக்கொண்டு வந்தனர்.

எனவே நாம் வருபவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அப்படகை நோக்கிச் சில துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தோம். உடனடியாக அந்தப் படகுகளில் இருந்து எம்மை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. நாமும் திருப்பித் தாக்கத் தொடங்கினோம். அச்சமயம் அப்படகுகளில் இருந்து எம்மை நோக்கி ஆர்.பி.ஜீ ரொக்கட் லோஞ்சர் குண்டுகளும் தீர்க்கப்பட்டன.

இதனால் நாம் படகின் அணியத்துக்குள் பாதுகாப்புத் தேடிக்கொண்டோம். அச்சமயம் எம்முடன் இருந்த சமிந்த என்ற சிப்பாய் காயமடைந்தார். சற்று நேரத்தில் துப்பாக்கிச் சண்டை ஓய்ந்ததும் நாம் எமது தளத்துக்குச் சென்றுவிட்டோம்'' என்று கூறினார்.

மேலும் இரு சிப்பாய்கள் சாட்சியமளிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைப்பதாகப் பதில் நீதிவான் க. கேசவன் தெரிவித்தார். (இ-9)

## சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிய குரங்கு 14பேரை கடித்தது

### சாவகச்சேரிப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி டிச. 5

வளர்ப்புக் குரங்கு ஒன்று சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிய போது சிலர் அதனைப் பிடிக்கத் துரத்திக்கொண்டு சென்றனர். அப்பொழுது அந்தக்குரங்கு எதிரேவந்த பத்து சிறுவர்கள் உட்பட பதினான்கு பேரைக் கடித்துக்காயப் படுத்தியது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரியில் இடம் பெற்றது.

குரங்கினால் கடியுண்டவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர். பெரும் பிரயத்தனத்தின் பின்னர் குரங்கு பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டது. (இ-117)

## கிராம சேவையாளரை தாக்கினாராம்

யாழ்ப்பாணம், டிச. 5

கிராம சேவையாளரைத் தாக்கியதாகக் கூறப்படும் நபர் ஆயிரம் ரூபா காசுப் பிணையுடன் சரீரப்பிணையில் செல்ல பதில் நீதிவான் க. கேசவன் அனுமதித்தார்.

ஆவரங்கால் மேற்குக் கிராம சேவையாளரான துரைராஜா என்பவரை அவரது அலுவலகத்தில் வைத்து தாக்கியதாக இந்த வழக்கில் கிருஷ்ணபிள்ளை பாஸ்கரன் என்ற இளைஞர் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

இவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தபோது பதில் நீதிவான் அவரை பிணையில் விடுதலை செய்து வழக்கை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'சீசன் ரிக்கெற்' வழங்கும் பணி கோண்டாவில் டிப்போவில்

தென்மராட்சி, டிச. 5

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் வழங்கப்படும் பருவகாலச் சீட்டு கடந்த இரு மாதங்களாக யாழ். பஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படாமல் கோண்டாவில் டிப்போ அலுவலகத்தில் வழங்கப்படுவதால் அரச ஊழியர்கள் இதனைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

சீசன் ரிக்கெற் பெறுவதற்காக அரை நாள் லீவு பெற்று கோண்டாவில் டிப்போவுக்கு செல்ல வேண்டியுள்ளதாக சிலர் தெரிவித்தனர்.

## மற்றும் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு – திருக்கோவில் இ. போ. ச. பஸ் கிரனேட் வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்துள்ளது. (இ-21)

# வாழ்க்கையை கருவியாக கொண்டு தெய்வத்தை நாட முயற்சியுங்கள்

இறைவனோடு இதயத்தால் தொடர்பு படாத மனிதன் இன்புற்று வாழான் என்பது இயல்பு. மனிதன் தானே மகத்தான பிறப்புடையவன் என பெருமை கொள்ளுகிறான். ஆனால் பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் அவன் வாழும் காலத்தில் இவ்வையத்திற்கு அவனால் பயனே ஒழிய அவனது இறப்புக்குப் பின்னால் ஏதுபயன்? சில ஐந்தறிவுடைய மிருகங்கள் கூட தம் இறப்புக்குப் பின்பும் பயன்படுகின்றன. குறிப்பாக பல மிருகங்களின் சரீரத்தின் உறுப்புக்கள் அவை இறந்த பின்னாலும் மனிதனால் பயன்படுத்தப் படுகிறது. மானின் தோல் இருக்கையாகவும், மாட்டின் தோல் மத்தளம் செய்யவும், உடும்பின் தோல் உடுக்குச் செய்யவும், யானையின் தந்தம் அழகுப் பொருளாகவும், மிருகங்களின் பற்கள் கூட ஆபரணங்களாகவும், சில மிருகங்களின் சரீரம், சில மனிதர்களின் உணவாகவும் பயன்படுகின்றது. ஐந்தறிவுடைய மிருகங்களின் அங்கங்கள் அவற்றின் இறப்புக்குப் பின்னால் பயன்படுவது போல ஆறறிவுடைய மனிதனின் அங்கங்கள் இறப்புக்குப் பின்னால் பயன்படுவதில்லை. மனிதனின் அங்கங்களில் சிலவற்றை அவனது இறப்புக்குப் பின்னால் பிறர் ஒருவருக்குப் பயன்படுத்துவது ஆயினும் அவன் உயிரோடு இருக்கின்ற போது உத்தரவு பெறப்பட வேண்டும் என பல நாடுகளிலும், வாழ்வியற் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எனவே இறப்புக்குப் பின்னால் இவ் வையகத்திற்கு உதவாத மனிதன் வாழும் காலத்தில் இவ் வையகத்திற்கு தன்னால் இயன்றவற்றை செய்வதே உகந்த மகத்துவமாகும்.

வாழும் காலத்தில் மனிதன் இறைவனின் நினைப்போடு வாழ்வானேயானால் வாழ்வில் அவன் சந்திக்கும் ஒவ்வோர் எல்லைகளையும் சிரமமின்றித் தாண்டுவான். உயர்ந்த வாழ்வியற் கருத்துக்களைக் கூறிய சைவ சமய நூல்களில் உன்னதமான நூல் திருவாசகம். திருவாசகத்தைப் படைத்த மணிவாசகர் 'போற்றித் திருவகவல்' என்ற பகுதியில் தெய்வ சித்தம் மனிதனை எங்கு எங்கெல்லாம் காக்க வேண்டும் என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்:

### ஞானக் கதிர்

''கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல் விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி''

இப் பாடல் அடியில் மனிதன் வாழ்வில் தப்ப வேண்டிய எல்லைகளை மிக அழுத்தமாக சுட்டிக் காட்டுகிறார்.

'கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும்'. என்று மணிவாசகர் கூறுவதன் அர்த்தம் கல்வியோடு தொடர்புடைய அனைவர்க்கும் உகந்த உயர் கருத்தாகும். கல்வி கற்பவர்கள் இடத்து போட்டியையும், பொறாமையையும், அவாவையும் உண்டாக்க கூடியது. கல்வியோடு கடவுள் பக்தி சேராவிட்டால் கற்றவனால் பயன் இல்லை. எனவே போட்டி, பொறாமை, அவா என்னும் இயல்புகளுடன் தொடர்புடைய கல்வியைத் தெய்வசித்தம் உடையவன் தொடருகின்ற போது காத்துக் கொள்ளுவான். இரண்டாவதாக 'செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்' என்ற அடியைவிளங்கிக்கொள்ளுவோமேயானால் ஒருவனிடத்தில் அவனதுதேவைக்கு மிஞ்சிய செல்வம் சேருகின்ற போது அச்செல்வம் அவனுக்குத் துன்பம் தரும் என்பதாகும். குறிப்பாக பொருள் நிறைந்தவன் அப்பொருளைப்பற்றிய நினைப்போடு எவ்வேளையும் நிம்மதியாக வாழமாட்டான். பொருட் செல்வம் உடையவன் தெய்வ சித்தத்தோடு வாழ்வானேயானால் செல்வத்தினால் வரும் அல்லலில் இருந்து தன்னைக் காக்கத் தர்மங்களைச் செய்து தப்பித்துக் கொள்வான். அடுத்ததாக 'நல்குரவு என்னும் தொல் விடம் பிழைத்தும்' என்று கூறும் கருத்தினை விளங்கின் நல்குரவு என்பதன் பொருள் வறுமை என்பதாகும். வறுமையுற்றகாலத்திலும், மனிதரிடம் தெய்வசித்தம் இல்லையேயானால் அவன் வறுமையின் கொடுமையைக் காக்க வரம்பு மீறி விடுவான். உச்ச வறுமை ஏற்படுகின்ற போது மனிதனிடையே பலபல சிந்தனைகள் தோன்றும். அவனது உணர்வுகள் களவு செய்யவும் தூண்டும். எனவே வறுமை வந்த காலத்தில் கூட மனிதன் தன்னைக் காத்துக் கொள்வதற்குத் தெய்வ சித்தம் வேண்டும். தொடர்ந்து இப் பாடலின் அடுத்த அடியை நோக்குவோமேயின் 'புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்' என மணிவாசகர் குறிப்பிடுவது உணர்ச்சி வசத்தினால் மனிதன் தப்புச் செய்கின்ற வாய்ப்பு அதிகம் என்பதாகும். தெய்வசித்தம் ஒருவனோடு ஒன்றியிருக்குமேயானால் அவன் பல் துறைகளிலும் தப்பித்துக் கொள்ளுவான் என்பதை விளக்குகிறார். உயர்ந்த இந்துத் தத்துவங்கள் அனைத்தும் வாழும் மனிதனோடு தெய்வ சிந்தனை சேருமேயானால் அவன் வாழ்வாங்கு வாழ்வான் எனக் கூறுகிறது. எனவே தெய்வசித்தம் உள்ள மனிதன் பிறர்க்குத் தீமை செய்ய நினையான். பிறர்க்கு நன்மை செய்ய நாளும் எண்ணுவான். தெய்வ சித்தம் உடையவர்கள் ஆற்றுகின்ற பணிகள் அவர்களது இறப்புக்குப் பின்னாலும் இவ்வுலகிற்குப் பயன்படும். உலகத்திற்கு உகந்ததை அறிந்து உதவக் கூடியவன் தெய்வ சித்தமுடையவன். இவன் வாழும்போது ஆற்றுகின்ற பணிகளால் இறப்புக்குப் பின்னாலும் வாழ்வான். இதனையே வள்ளுவர்:

''ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்
மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்''


எனவே வாழும் போது தெய்வ சித்தத்தோடு வாழ்ந்து எம் வாழ்விற்குப் பின்னாலும் இவ் வையகம் எம்மால் பயன் பெற முயல்வோமாக.

★ ஆறு திருமுருகன்

## நாளை

**கார்த்திகை 21**
சனிக்கிழமை
திதி: ஸப்தமி
பின் இரவு 12-16 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
முற்பகல் 10.43 வரை
சுபநேரம்: 3 17-4 47
ராகுகாலம்: 9.17 10 47
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொதுமக்கள் செல்லும் வாகனங்களில் ஆயுதப் படையினர் செல்லக் கூடாது

## மட்டக்களப்பு பதில் நீதிபதி தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிச. 5

'பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் ஆயுதப்படையினர் சீருடையிலும், ஆயுதபாணிகளாகவும் பயணம் செய்வது நிறுத்தப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சு இது குறித்து உத்தரவு ஒன்றை விடவேண்டும்.'

மட்டக்களப்பு பதில் நீதிபதி கா. தங்கவடிவேல் மரண விசாரணைத் தீர்ப்பொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு - திருக்கோயில் பஸ் கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட கருவப்பன்கேணி வாசி எஸ். ஞானப்பிரகாசத்தின் மரண விசாரணையில் வழங்கிய தீர்ப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் நடைபெற்ற இந்த மரண விசாரணையில் காத்தான்குடி வாசியான அப்துல் ரஸாக் முகமட் றனிபா (வயது 21) சாட்சியமளித்தார்.

சம்பவதினம் காலை 10.30 மணிக்கு மட்டக்களப்பு திருக்கோயில் இ.போ.ச. பஸ்ஸில் காத்தான்குடியில் வைத்து ஏறினேன்.

ஆரையம்பதி விசேட அதிரடிப் படைமுகாமின் முன் பயணிகள் இறக்கப்பட்டு பஸ் சோதனையிடப்பட்டது. பின்னர் பயணிகளுடன் விசேட அதிரடிப்படையினரும் ஏறினர்.

பஸ்ஸுக்குள் ஏறிய விசேட அதிரடிப்படையினரில் ஒருவர் முன் மிதிபலகையிலும், இருவர் பின் மிதிபலகையிலும் நின்றனர் 3 பேர் சாரதிக்கு பின்னால் நின்றனர்.

செட்டிபாளையம் சோதனைச் சாவடி உட்பட எந்தவொரு சோதனைச் சாவடியிலும் நிற்காமல் பஸ் சென்று கொண்டிருந்தது.

களுதாவளை ஊடாக பஸ் சென்று கொண்டிருக்கையில் பின் மிதிபலகையில் நின்ற விசேட அதிரடிப்படையினரின் தலைக்கு மேலாக கிரனேட் ஒன்று வந்து பஸ்ஸுக்குள் விழுவதைக் கண்டேன்.

பின் ஆசனத்தில் இருந்த நான் அதனை காலால் தட்டிவிட அது பஸ்ஸின் அலுமினியக் கம்பத்தில் பட்டு நெருப்பு பொறி பறந்து வெடித்தது.

பஸ்ஸை களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரி நோக்கி செலுத்துமாறு உத்தரவிட்ட விசேட அதிரடிப்படையினர் வீதியின் இரு மருங்கிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் வந்தனர்.

கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் நானும் பலத்த காயமடைந்தேன் இப்படி அவர் கூறினார்.

ஞானப்பிரகாசத்தின் மரணம் குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பு வழங்கிய பதில் நீதிபதி, பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் பாதுகாப்புப்படையினர் பயணம் செய்யக்கூடாத வகையில் பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அப்படி பணிப்புரை விடுக்காத பட்சத்தில் பொதுமக்களுக்கு காயம், உயிரிழப்பு தொடர்ந்து நேரிடலாம் என்றும் கூறினார். (இ-21)

## இந்திய நாடாளுமன்றம் ...

(முதலாம் பக்கத் தொடர்)

முடியாத நிலை ஏற்பட்ட பின்பே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை ஜனாதிபதி நேற்று எடுத்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்ட அறிவிப்பில் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன் புதிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று நண்பகல் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால், மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து நிலுவையில் உள்ள நிதி அலுவல்களைக் கவனிக்க சட்டப்படியுள்ள பல்வேறு வழிமுறைகளை எடுத்துரைத்தனர்.

புதிய தேர்தல் பெப்ரவரி மாதம் 3 ஆவது வாரத்துக்கும் மார்ச் மாதம் முதல் வாரத்துக்கும் இடையே நடத்தி முடிக்கப்படும் என்று தேர்தல் ஆணையர் ஜி.ரி.ரி. கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று அவசரமாகக் கூட்டப்பட்ட தேர்தல் ஆணையத்தின் விசேட கூட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவையுடன் மேகாலயா, நாகாலந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்கும் தேர்தல் நடத்தப்படும் என்று கூறினார்.

இந்தப் பொதுத் தேர்தல்கள் மூன்று கட்டங்களாக நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி 5 ஆம் திகதி திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை வெளியிட்ட பிறகு மக்களவைத் தேர்தலுக்கான கால அட்டவணை அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மக்களவையைக் கலைக்க ஜனாதிபதி எடுத்த முடிவை பாரதீய ஜனதாக் கட்சி வரவேற்றுள்ளது

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடு மக்களவையின் பதவிக்காலம் முடிவதற்கு மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னதாகவே அது கலைக்கப்படுவதற்கு காங்கிரஸும், ஐக்கிய முன்னணியுமே பொறுப்பு என்று கூறினார்.

தமது கட்சி அரசமைக்க எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றும் —தமது கட்சி தேர்தலைச் சந்திக்க தயாராக இருக்கிறது என்றும் —அவர் கூறினார். (இ-3)

## யாழ். மாவட் ...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும். பத்திரிகையாளர்கள் மாநாட்டில் அவர் இது பற்றிப் பிரஸ்தாபித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறஉள்ள தேர்தல் சுதந்திரமான, நியாயமான, ஒழுங்கான தேர்தலாக இருக்க [illegible] உறுதியாக இருக்கின்றது என்றும் அமைச்சர் பிரஸ் தெரிவித்தார். (இ-21)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது விசாரணை மேற்கொள்ள வேண்டும். அல்லது அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியும் — இந்த உண்ணாவிரதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-4)

## மருத்துவ பரிசோதனை முகாம்

யாழ். இந்துக்கல்லூரி லியோக் கழகத்தின் ஆதரவில் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்)

உதயன் — சஞ்சீவி செய்தியாளர், யாழ். தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவரை வியாழன்று நேரில் சந்தித்தார்.

அவர் அளித்த பதில் வியப்பாக இருந்தது 'எனக்கே உங்கள் பத்திரிகையைப் பார்த்துதான் தேர்தல் அறிவிப்புப் பற்றியே தெரியும். என்னிடம் கேட்டால் நான் என்ன பதில் சொல்லுவது?— என்று குழம்பினார் அந்த அதிகாரி நேற்று முற்பகல் 11-00 மணி வரை வேட்பாளர் நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்வது பற்றிய உத்தரவு எதுவும் யாழ். அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை.

களநிலைமை என்னவென்று தெரியாமல் தேர்தல் குறித்து அறிவிக்கும் அரச உயர்பீடத்தின் நோக்குக்கு இது ஒர் உதாரணம்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தலாமா? வாக்காளர் பட்டியல்கள் மற்றைய ஏற்பாடுகள் பூர்த்தியா? தேர்தலை நடத்த தயாராக இருக்கின்றீர்களா? — என்ற முறைக்குத்தானும் எந்தக் கேள்வியும் யாழ். தேர்தல் திணைக்களத்திடம் கேட்காமலேயே தேர்தல் குறித்து அரசு முடிவு எடுத்திருக்கின்றது.

வடக்கு விவரங்கள் குறித்து கொழும்பில் உள்ள 'குளிரூட்டப்பட்ட அறைகளில் எவ்வாறு முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதற்கு இது ஒர் உதாரணம் அல்லவா,

## மருச்சந்தி...

(முதலாம் பக்கத் தொடர்)

குரல்'' தெரிவித்தது.

இத்தாக்குதலில் ஆயுதங்களைத் தாம் கைப்பற்றியதாகவும்—

9 படையினர் உயிரிழந்தனர் என்றும்-புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது. (இ-164-3)

## நாகர் கோயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரம் கிடைக்கவில்லை என்று 'புலிகளின் குரல்' நேற்றிரவு தெரிவித்தது. (இ-3-31-117-164)

## ஹட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

எம். கே. பெர்னாண்டோ அன்சன்ஸ் என்ற தனியார் நிறுவனத்துக்குரிய மேற்படி எரிபொருள் நிலையத்தில் தலா 1 இலட்சம் 50 லீற்றர் கொள்வனவு தாங்கிகள் நான்கு உள்ளன.

நான்கு தாங்கிகளையும் தாக்கும் நோக்குடன் குறித்த நேரத்தில் வெடிக்கத்தக்க வகையில் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன.

குண்டு வெடிப்பில் 3 தாங்கிகள் சேதமடைந்துள்ள போதிலும் ஒரு தாங்கி தான் பலத்த சேதமடைந்தது. தாங்கிகளில் போதியளவு எரிபொருள் இல்லாத காரணத்தினால் பாரிய அழிவு தவிர்க்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து பொலீஸாரும், ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் விரைந்து வந்து தீயைப் பரவ விடாமல் கட்டுப்படுத்தினர்.

நேற்றுக் காலை 10.32 க்கு வெடிக்கக்கூடிய வகையில் வைக்கப்பட்டிருந்த மற்றைய குண்டு 10-30க்கு மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டதாக ஹட்டன் பொலீஸார் தெரிவித்தனர். (இ-9-3-21)

## சிமெந்து விநியோகம்

தரமான சிமெந்தை உற்பத்தி செய்து வழங்கிய சிமெந்துக் கூட்டுத்தாபனம் தரநிர்ணய சபை நிபுணர்களால் பரிசீலிக்கப்பட்டு பாவனைக்குச் சிறந்தது எனச் சிபார்சு செய்யப்பட்ட DIAMOND No. 1 சிமெந்தை எவ்வித கட்டுப்பாடுமின்றித் தேவையான அளவில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விநியோகத்தை மேற்கொண்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**மொத்தவிலை ரூபா 480**

விற்பனைப் பகுதி,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
65, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.

(சி/2257)

## மரண அறிவித்தல்

### திருமதி பூபதி அம்பலவாணர்

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பூபதி அம்பலவாணர் (ஆசிரியை, தும்பற ம. வித்தியாலயம்) கொழும்பில் 03-12-97 இல் காலமானார்.

அன்னார் அம்பலவாணரின் அன்பு மனைவியும், கதிரமலைநாதன், இரத்தினேஸ்வரி, சிவகுமார், விக்கினேஸ்வரன், கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-12-97) காலை 10 மணிக்கு கொழும்பு பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
வேலுப்பிள்ளை அம்பலவாணர்
(கணவன்)

மினிபுர,
தும்பற.

(சி/2266)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org